இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஜனவரி 2023 January | இதழ் 383 ISSUE




# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal


ANNUAL AWARDS - 2022


HomeLife / Future Realty Inc.,


Royal LePage Ignite & United Realty


Association of Past Business Owners of Sri Lanka

## தமிழ் இலக்கியத் தோட்டம்





## இயல் விருதுகள் 2022

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

32வது ஆண்டில் 32nd Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*

# புதிய பயமுறுத்தல் !

இன்னுமொரு ஆண்டுக்கு விடைகொடுத்து, 2023க்குள் புகுந்தாகிவிட்டது!

புத்தாண்டில் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது வழமையான எதிர்பார்ப்பாக கூறப்படினும், நிகழ்காலப் போக்கு பழையன கழிதலாகக் காணப்படவில்லை. கடந்த ஆண்டின் தொடர்ச்சியாகவே புதிய ஆண்டு அமையலாமென எதிர்வு கூறப்படுகிறது.

கொரோனா பேரிடர் ஏற்படுத்திய தாக்கம் விட்டுவிட்டு வீரியம் காட்டுகிறது. 'இதனுடன் வாழப் பழகுங்கள்' என்று ஒவ்வொரு நாட்டு அரசும் தனது மக்களுக்குக் கூறுகிறது.

இதற்கு எவ்வாறு கனடா விதிவிலக்காக முடியும்?

பணவீக்கம், விலைவாசி ஏற்றம், பொருட்களின் பற்றாக்குறை, குடியிருப்புகளின் வாடகை அதிகரிப்பு, உணவு வங்கிகளின் நீண்ட வரிசை என்பவற்றுக்கு நிகராக களவு, கொலை, கொள்ளை, வழிப்பறி, துப்பாக்கிச் சூடு, காரணமற்ற திடீர் தாக்குதல்கள் என்பவை இப்போது தினசரி நிகழ்வுகளாகிவிட்டன.

போதைவஸ்துப் பாவனை அதிகரிப்பு பல குற்றச்செயல்களுக்குக் காரணமாகியுள்ளது. கைத்துப்பாக்கிப் பாவைனக்கு கனடிய அரசு தடைவதித்துள்ளது என்பது வெறுமனே ஒரு செய்தியாகவே உள்ளது.

கடந்த வருடத்தின் நான்காவது காலாண்டில் மட்டும் ஒன்ராறியோவில் நான்கு பொலிசார் கடமையின்போது கொல்லப்பட்டுள்ளனர். ரொறன்ரோவில் வீடற்ற ஒருவரை கொலை செய்தமைக்காக எட்டு இளம்பெண்கள் கைது செய்யப்பட்டமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இத்தனை நெருக்கடிகளையும் சுமந்தவாறு நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கையில், இவ்வருடத்தில் கனடிய பொதுத்தேர்தல் இடம்பெறலாமென்ற அறிவிப்பு அச்சமூட்டுவதாக உள்ளது.

ஜஸ்ரின் ரூடோவின் சிறுபான்மை அரசுக்கு, ஜக்மீத் சிங்கின் என்.டி.பி. வழங்கி வரும் 'கனவான்கள் ஒப்பந்த' ஆதரவு எந்த வேளையிலும் விலத்தப்படலாமென்பதே இதற்கான காரணம்.

அரசியலமைப்பு நியமப்படி அடுத்த பொதுத்தேர்தல் 2025 அக்டோபரிலேயே இடம்பெற வேண்டும். ஆனால், ஐபொஸ் நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் சுமார் ஐம்பது வீதமான கனடியர்கள் இந்த வருடத்தில் தேர்தல் நடைபெறலாமென நம்புகின்றனர்.

18-34 வயதுக்குட்பட்ட இளையோர் உடனடித் தேர்தலை விரும்புவதை இக்கருத்துக்கணிப்பு சுட்டுகிறது. அதேசமயம், லிபரல் தலைமைப் பதவியிலிருந்து ஜஸ்ரின் ரூடோ விலகுவார் என்ற கருத்தும் பரவலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள பொருளாதார வாழ்வியல் பிரச்சனைகள் போதாதென்று, ஒரு தேர்தலும் வருமானால் அதனால் பாதிப்படைவது பொதுமக்களே.

அரசியல் தலைவர்களின் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்றவாறு இரண்டாண்டுக்கு ஒரு தடவை ஒரு பொதுத்தேர்தல் என்றால், உண்மையிலேயே இது பொதுமக்களுக்கு விடுக்கப்படும் ஒரு பயமுறுத்தல் எச்சரிக்கை.

எந்த அரசியல்வாதி இதனைப் புரிந்து கொள்வார்?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

**தொலைபேசி:**
416 920 9250

**மின்னஞ்சல்**
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் & தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**பொது முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன்கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

**இணையம்**
www.tamilsinformation.info

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

# உலகளாவிய இளையோர் கனடாவில் கற்கவும் பணிபுரியவும் மேலதிக வாய்ப்பு செயற்திட்டம்!

## இந்த மாதம் 9ம் திகதியிலிருந்து விண்ணப்பிக்கலாம்

உலகம் முழுவதும் வாழும் இளையோர் இன, மத வேறுபாடின்றி கனடாவில் கற்கவும் பணி புரியவும் - சமகாலத்தில் கனடிய இளையோர் வேறு நாடுகளில் கற்கவும் பணி புரியவும் மேலதிக வாய்ப்பை வழங்கும் திட்டத்தை கனடிய அரசு அறிவித்துள்ளது.

'சர்வதேச அனுபவ கனடிய செயற்திட்டம்' (International Experience Canada Program) இதற்கான வாய்ப்பை மேலும் 20 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம், 90,000 இளையோர் கனடாவுக்கு வருகை தந்து இங்கு கற்கவும் பணிபுரியவும் அனுமதிக்கப்படுவதோடு, கனடிய இளையோர் வெளிநாடுகளுக்குச் சென்று கற்கவும் பணிபுரியவும் முடியும். இதற்கென 36 நாடுகளுடன் கனடா ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இந்த மாதம் (ஜனவரி) 9ம் திகதியிலிருந்து ஏற்கப்படுமென்று கனடிய குடியுரிமை - பிரஜாவுரிமை அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் இளையோர் இரண்டு வருடங்களுக்கு இதில் இணைத்துக் கொள்ளப்படுவர். விண்ணப்பம் செய்பவர்கள் 18 க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதினராக இருக்க வேண்டும்.

மூன்று வகையினராக இத்திட்டத்தில் இணைய அனுமதி உண்டு. விடுமுறை காலங்களில் பங்கேற்கத் தகுதியான விசா (Open Visa) வழங்கப்படும். சர்வதேச கூட்டுத்திடடத்தின் கீழ் குறிப்பிட்ட வேலை வழங்குனருடன் இணைந்து அத்துறையில் பயிற்சி பெற முடியும். துறைசார் நிபுணத்துவ இளையோர் அத்துறைசார் நிறுவனங்களுடன் இணைந்து மேலதிக வேலைப்பயிற்சியை பெறலாம்.

இதுபற்றிய தகவல்கள் ஆங்கிலத்தில் கீழே தரப்பட்டுள்ளது:

International Experience Canada Prohram (IEC) is a reciprocal program that allows Canadian and international youth to work and travel in each other's countries. This increase means that nearly 90,000 candidates will be able to work and travel in Canada, including Francophone youth, which will help employers fill labour gaps, including for seasonal work opportunities in Canada's tourism industry. Applicants will be able to apply as of January 9, 2023.

Canada has youth mobility arrangements with 36 countries and foreign territories through the IEC Program that allow youth from Canada's partner countries to work and travel in Canada for up to 2 years. The ages range from 18 to 35 depending on the country.

There are 3 categories of participation under the program:

Working Holiday participants receive an open work permit that allows them to work anywhere in the host country to support their travels.

International Co-op (Internship) participants receive an employer - specific work permit that allows students to gain targeted experience in their field of study.

Young Professionals participants receive an employer - specific work permit to gain targeted, professional work experience that is within their field of study or career path.



எஸ்தி

## ஏப்ரல் முதலாம் திகதியில் அரச சேவை அலுவலர்கள் பணிக்கு திரும்ப வேண்டும்



கனடிய மத்திய அரசாங்கத்தின் அலுவலர்கள் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து தங்களின் வழமையான அலுவலகத்துக்கு பணிக்குத் திரும்ப வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனா பேரிடரை முன்னிட்டு அலுவலகப் பணியாளர்கள் தங்களின் வசிப்பிடங்களிலிருந்தவாறு பணியாற்ற அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது நிலைமை மாறியிருப்பதால் வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கட்டாயமாக அலுவலகத்துக்குச் செல்ல வேண்டுமென கனடிய மத்திய அரசு அறிவித்துள்ளது. கனடிய வருமான வரித் திணைக்களம் போன்ற இருபதுக்கும் அதிகமான அரசசார்பு வேலைத்தலங்களுக்கும் இது கட்டாயமாகிறது.

கனடிய மத்திய அரசு சேவையில் சுமார் 335,000 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுள் 165,000 க்கும் அதிகமானவர்களைக் கொண்ட தொழிற்சங்கம், அரசாங்கத்தின் புதிய அறிவிப்பை ஆட்சேபித்துள்ளது. மீண்டும் வேலைக்குத் திரும்புவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் 90 வீதமானவர்கள் வேலைக்குத் திரும்ப மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

தங்கள் ஆட்சேபத்தையும் மீறி அரசாங்கம் அலுவலகத்துக்கு பணிக்குத் திரும்புவதை கட்டாயப்படுத்தினால், வெளியேறுதல் அல்லது சட்டப்படி வேலை செய்தல் போன்றவைகளை உறுப்பினர்கள் மேற்கொள்ள நேரிடலாமென தொழிற்சங்க தலைவர் தெரிவித்துள்ளார். மாகாணங்களின் அரச கரும பணியாளர்கள் விடயத்தில் அந்தந்த மாகாண அரசுகளே அவர்களின் பணி முறைகளை தீர்மானிக்கும்.



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடா உட்பட உலகின் பல நாடுகளில் கடந்த இரண்டு வருடங்களாக பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கொரோனா பேரிடரால் மனஉளைச்சல், தாம்பத்திய உறவுகளில் தடங்கல்கள், பிரசவத்துக்கு மருத்துவமனைக்குச் செல்வதில் ஏற்பட்ட அச்சம் போன்றவை இதற்கான முக்கிய காரணமென சொல்லப்பட்டுள்ளது. கடந்த ஒன்றரை தசாப்தங்களாக கனடாவில் பிறப்பு வீதம் சரிவு நிலையில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தூரத்திலுள்ள நோயாளிகளுக்கு சிறுநீரகங்களை எடுத்துச் செல்ல லம்போகினி சூப்பர் காரை இத்தாலிய பொலிசார் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இத்தாலியின் வடகிழக்கிலுள்ள படுவாவிலிருந்து மொடெனா, பரிஸ் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கே இவ்வாறு சிறுநீரகங்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இது குறித்து பொலிசார் வெளியிட்ட பதிவில், கிறிஸ்மஸ் காலத்தில் இருவருக்கு இவ்வாறு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மேற்கொண்டதால் அவர்களின் குடும்பங்கள் மகிழ்ச்சியடைந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் - 19 மற்றும் பல்வேறு உபாதைகளுக்கு அளவுக்கதிகமான மருந்துப் பொருட்களை உள்ளெடுத்ததன் காரணமாக அமெரிக்க மக்களின் சராசரி ஆயுட்காலம் படிப்படியாக குறைவடைந்து வருவதாக அந்நாட்டு நேய்க்கட்டுப்பாட்டு திணைக்களம் புள்ளிவிபரங்களுடன் தெரியப்படுத்தியுள்ளது. கடந்த கால் நூற்றாண்டு காலத்துள் இங்கு வாழ்நாள் குறைவு ஏற்பட்டுள்ளது இதுவே முதற்தடவை. 2019ல் 78.8 ஆகவிருந்த அமெரிக்கரின் ஆயுட்காலம் 2021ல் 76.4 ஆக குறைந்துள்ளது. கனடாவில் 81.75 ஆகவும், பிரித்தானியாவில் 80.8 ஆகவும் மனிதரின் ஆயுட்காலம் உள்ளது.

புகைத்தல் முற்றாக இல்லாத நாடாக நியுசிலாந்தை மாற்றும் நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்டமாக இளையோர் சிகரெட் வாங்கவும் புகைப்பதற்கும் வாழ்நாள் தடை விதிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2009 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு வணிக நிலையங்களில் புகைத்தல் பொருட்களை விற்க முடியாது. 2025ல் உலகில் புகைத்தல் இல்லாத முதலாவது நாடாக நியூசிலாந்து மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் ரடிசன் நட்சத்திர விடுதியில் அமைந்திருநத 150 அடி உயரமான கண்ணாடி மீன்தொட்டி உலகப்புகழ் பெற்றது. அக்வாடோம் என்ற பெயரிலான இத்தொட்டி கடந்த மாதம் திடீரென வெடித்துச் சிதறியதால் அதிலிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான பலவர்ண அரிய மீன் வகைகள் துடிதுடித்துச் செத்துவிட்டன. சிதறிய தொட்டியிலிருந்த சுமார் பத்து லட்சம் லீற்றர் தண்ணீர் வீதிகளால் ஆறு பெருக்கெடுத்தது போன்று ஓடி வாகனங்களின் போக்குவரத்தை பல மணித்தியாலங்கள் தடைசெய்தது.

## தென்கொரிய பெண்கள் திருமணத்துக்கு மறுப்பு!

தென்கொரியாவில் திருமணம் செய்யாது தனியாக வாழும் விரும்பும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2021ம் ஆண்டு நிலைவரப்படி ஐந்துக்கு இரண்டு என்ற எண்ணிக்கையில் திருமணம் செய்யாது வாழ்கின்றனர்.

2000ம் ஆண்டில் 15.5 வீதப் பெண்கள் திருமணம் செய்யாது தனியாக இருப்பதாக அந்நாட்டு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. இந்நிலை தொடருமானால் 2050ம் ஆண்டில் தென்கொரிய சனத்தொகையில் நாற்பது சதவீதமானவர்கள் திருமணம் செய்யாதவர்களாக இருப்பார்கள்.

தென்கொரியாவில் வேலை பாதுகாப்பு இல்லாமை, நிதி சுதந்திரம் இல்லாமை போன்ற காரணங்களால் திருமணமும் வேண்டாம், குழந்தைகளும் வேண்டாமென இங்குள்ள இளைய சமூத்தினர் சொல்லி வருகின்றனர். கிடைக்கப்பட்ட தரவுகளின்படி சுமார் 12 சதவீதமானவர்கள் குழந்தை வளர்ப்பு பெரும் சுமையாக இருக்குமென கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி 25 சதவீதமானவர்கள், தங்களுக்குச் சரியான ஜோடி கிடைக்கவில்லையென காரணம் தெரிவித்துள்ளனர். இதனால் தங்களுக்கு திருமணமே வேண்டாமென பகிரங்கமாகத் தெரிவிக்கும் இளையோர்களால் நாட்டின் பிறப்பு வீதம் மிக மோசமாகக் குறையுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

## 2,400 முதிய நோயாளர்கள் ‘திடீர் இடமாற்றம்’

ஒன்ராறியோ மருத்துவமனைகளில் நீண்டகாலமாக தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த சுமார் 2,400 வரையான முதிய நோயாளர்கள் அவர்கள் சம்மதமின்றி வெவ்வேறு நீண்டகால முதியோர் பராமரிப்பு நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மருத்துவ மனைகளில் புதிய நோயாளர்களை அனுமதிக்க இடவசதி குறைவாக இருந்ததாலும், மருத்துவ பராமரிப்பு அவசியமற்ற முதியவர்கள் மருத்துவமனைகளில் தொடர்ந்து தங்கியிருந்ததாலும் அவர்களை ‘இடமாற்றம்’ செய்ய நேர்ந்ததாக மாகாண அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட பெரும்பாலானவர்கள் அவர்களின் குடும்ப உறவுகள் வசிக்கும் இடங்களிலிருந்து பல மைல்கள் தூரத்திலுள்ள முதியோர் பராமரிப்பு இல்லங்களுக்கு எந்த முன்னறிவித்தலுமின்றி மாற்றப்பட்டுள்ளதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

# எக்காலத்திற்குமான தமிழ்ப்பெருநூல் திருக்குறள் பற்றிய ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வு!

## ஊரும் உலகும் - 12

உலகப் பெருநூல் எனத் தமிழுலகம் உவந்து போற்றும் திருக்குறள் பற்றிய விரிவான, ஆழமான ஆய்வுகள் ஐரோப்பிய மொழிகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இன்னமும் உள்ளன. திரு. ஜேசன் வில்லியம் ஸ்மித் 2020ல் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் இறையியல் பீடத்தில் தனது முனைவர் பட்டத்துக்காக சமர்ப்பித்த திருக்குறள் பற்றிய ஆய்வு அடுத்த ஆண்டில் நூலுருவில் வெளிவரவுள்ளது

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தின் மேர்சர் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் பேராசிரியர் ஜேசன் வில்லியம் ஸ்மித், A Text for All Times: The Tirukkural and the Construction of Tamil Religion - ‘எல்லாக் காலத்திற்குமான ஓர் பனுவல்: திருக்குறளும் தமிழ் மறையின் கட்டமைவுகளும்’ என்ற இருநூற்றி எண்பது பக்கங்களையும் ஐந்து நீண்ட அத்தியாயங்களையும் கொண்ட ஆய்வறிக்கையை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இதனை வாசித்தபோது, ஆய்வுச்செய்முறைச் செழுமையில் மேலும் பல புதிய, நவீன ஆய்வுகள் பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றி புதிய பாதையில் தொடரப்படுவதற்கு இது ஒரு முன்னோடியாகவும் தூண்டுகோலாகவும் அமையும் என்பது எனக்குப்பட்டது

தமிழகத்தின் பல்வேறு சமய, இலக்கிய, சமூக, பல்பண்பாட்டுக் குறியீடுகளுக்கிடையில் ஓர் பொதுமையான ஏற்புடமையை திருக்குறள் பூர்வகாலம் முதல் எங்கனம் பெற்றதென்பதை இந்நூல் நுட்பமாக ஆராய்கிறது.

ஐந்தாம் நூற்றாண்டில் யாக்கப்பட்ட புத்தமத தமிழ்க் காப்பியமான மணிமேகலையில் “தெய்வங் தொழாஅன் கொழுகற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப் பொய்யில் புலவன் பொருளுரை தேராய்..” என ஒரு திருக்குறட்பா முதன்முதலாக எடுத்தாளப்பட்டுள்ளது.



பேராசிரியர்
ஜேசன் வில்லியம் ஸ்மித்

திருக்குறளின் வயதெல்லையை கணிக்க உதவும் இவ்வெடுகோள் பொய்யில் புலவன் புத்தமதத்தில் அப்போதே பெற்ற ஏற்புடமையையும் ஓரளவு எடுத்தியம்புகிறது. அன்று முதல் இன்றுவரை சமண, சைவ, வைணவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய பேரிலக்கியங்களில் திருவள்ளுவரின் திருவார்த்தைகள் உவப்புடன் உள்வாங்கப் பெற்றனவென்பது தமிழ் இலக்கிய வரலாறு தரும் செய்தி.

தமிழுலகில் நீண்டகாலமாக சமய வேலிகளை மேவிய நிலையில் மதத்தலைவர்கள், துறவிகள், கவிஞர்கள், விமர்சகர்கள், அரசியல்வாதிகள் மதவாதிகள், இலக்கியப் புரவலர்கள் திருக்குறளை தமிழ் மறைநெறி நூல் போன்று பேணி வருதலால் காலப்போக்கில் தமிழ் மறையின் உள்ளார்ந்த, நெகிழ்ச்சியான கட்டமைவினை இனம் காட்ட இது வழிசமைக்குமெனவும் நூலாசிரியார் கருதுகின்றார்.

தமிழர் மத்தியிலுள்ள பலமதங்களிடையே ஒத்திசைவான ஒரு தமிழின அடையாளத்தைக் கட்டமைக்கும் நோக்கில் ஈ. வே. ரா. பெரியார் முதல், கலைஞர் கருணாநிதி வரை தமிழக அரசியல்வாதிகள், திருக்குறளைக் காலங்காலமாகப் பயன்படுத்தியமையை இவர் விளக்கியுள்ளார்.

திருக்குறள் யாக்கப்பட்டபோது அதனை ஆக்கியோன் மனித வாழ்வு பற்றி எத்தகைய மனப்பார்வையை நூலின் கேட்பிய சமூகத்திற்கு வழங்க விரும்பினார் என்ற கேள்வியை முன்வைத்து இந்த ஆய்வு துவங்குகின்றது,.

அறம், பொருள், இன்பம் என்ற மூவரிசையில் இலட்சியப் பாதையில் மனித வாழ்க்கையை நகர்த்தும் திருக்குறள், அதேவேளை நாளாந்த யாதார்த்த சூழலில் இடம்பெறும் சிக்கல்களையும் சுட்டத்தவறவில்லை என ஆசிரியர் கூறுவர்.

அறநெறி இலட்சியங்களின் உள்ளக நிலையில் மனதை ஆற்றுப்படுத்தினாலும், புறநிலை வாழ்வில் அதை அடையும் பாதை எளிமையானதல்ல என்பதை வள்ளுவன் வலிந்து கூறி வாசகரை நூலண்டை கூவியழைக்கின்றான் என ஆதாரங்களுடன் ஆய்ந்துள்ளார்.

பால், அத்தியாயம், பதம் என்ற மூன்று கட்டமைப்புகளின்வழி திருக்குறள் வாசகரை அணுகுகின்றது. இந்த மூன்றையும் ஒன்றாகக் கலந்தால்தான் திருக்குறளின் கேட்பியக் குறிக்கோள் யாது என முழுமையாகப் புரிந்துணரமுடியும் என்பது ஆய்வாளரின் விளக்கம்.

குறிப்பிட்ட சில முறைகளில் மட்டும் குறளின் குரலுக்கு செவிசாய்க்கும்படி வாசகரை ஈடுபடுத்தும் இலக்கியப் படைப்பாக அல்லாமல் என்றும் வாழும் மானிடப் பொதுப்பேரிலக்கியமாக திருக்குறள் ஏன், எப்படி செயற்படுகிறது என்பதை மனித வாழ்க்கையின் இயக்கநிலை சார்ந்த பல அகம் - புறம் பிரதிபலிப் புகளான அறம், அன்பு, அருளுடமை, போர், ஊழ், உழவு, நட்பு, சான்றாண்மை, கொல்லாமை, கல்வி, காதல், குடும்பம், குடிமை, நாடு, நன்மை, நன்றி, விருந்தோம்பல், வெகுளாமை போன்ற பல எடுத்துக்காட்டுகள் வழியாக அவர் நிறுவியுள்ளார்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் இறையியற்பீட முன்னாள் பேராசிரியர் அமரர் ஆன் மோனியஸ் அவர்களினது வழிகாட்டுதலில் துவங்கி பின்னர் பேராசிரியர் பிரான்சிஸ் கிழுனி அவர்களின் மேற்பார்வையில் இவ்வாய்வு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

2007 முதல் பேராசிரியர் ஆன் மோனியஸ் அவர்களை நல்ல நண்பராக நான் அறிவேன். தமிழியலில் ஆழந்த அறிவுள்ளவர். சில பன்னாட்டு மாநாடுகளில் நாம் சந்தித்தோம். இறுதியாக “தமிழர் மத்தியில் புத்தமதம்” என 2012ல் தாய்லாந்தில் ஒரு வாரமாக இடம்பெற்ற பன்னாட்டு மாநாட்டில் பலமுறை உரையாடினோம். அந்தத் தொடர்பின் அடிப்படையிலேயே இந்த ஆய்வினை வாசித்து, இதன் ஆய்வாளரும் நானும் தொலைபேசியில் இந்நூல் பற்றி உரையாடினோம்.

பரிமேலழகர் முதல் போப் ஐயர் (ஜி.யு. போப்) வரை பல தெளிவுரைகளை விரவி நுட்பமான இலக்கிய உத்திகளுடன் எழுதப்பட்ட இந்த நூல் இந்த வரிசையில் இடம்பெறும் தகுதியுடைத்து.

# நலமும் வளமும் வழங்கக் கடவதாக!

பிறேம் சிவகுரு - இங்கிலாந்து



## எல்லை கடந்த உலா

2022ம் ஆண்டு பிறந்ததே நேற்றுத்தான் போலிருக்கிறது. அதற்கிடையில் ஒரு வருடம் பறந்து இன்னொரு ஆண்டு பிறந்து விட்டதே என்ற வழமையான ஆலாபனங்கள் சக புத்தாண்டுச் செய்திகளுடன் 2023 பிறந்துவிட்டது.

பிறகென்ன சும்மா கிடந்த அம்மையாருக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததைப்போல, ஜோதிட குறிசொல்லிகள் புத்தாண்டு பலன்களை விட்டுவைப்பார்களா என்ன? மேற்குலகக் குறிசொல்லிகள், தமிழ்ச்சோதிடர்கள், சீனச்சோதிடர்கள் என எல்லா குறிசொல்லிகளும் தத்தமது பாணியில் புத்தாண்டு பலன்களை ஆருடங்களாக சொல்லித் தள்ளுகின்றனர்.

இன்னும் இரண்டு வாரங்களில் பிறக்கும் சீனப்புத்தாண்டு, நீர்முயலில் பிறப்பதால், இந்த நீர்முயல் பலன்படி அமைதி, செழிப்பு மற்றும் நம்பிக்கைக்குரிய ஆண்டாக 2023 இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், இவ்வாறான அமைதி மற்றும் நம்பிக்கையை உலகுக்கு வழங்க சீனத்தலைவர் ஜி ஜிங்பிங்கும் ரஸ்யத்தலைவர் விளடிமீர் புட்டினும் மனது வைக்க வேண்டுமே!

இவ்வாறான சோதிடங்களாவது பரவாயில்லை. ஆனால், இந்த திகில் ஆருடங்களைக் கூறும் புண்ணியவான்களோ இந்த விடயத்தில் இன்னும் ஒரு படிமேலேபோய், 14ம் நூற்றாண்டின் பிரபலமான பிரெஞ்சு குறிசொல்லி மிசேல் நொஸ்றடாமையும் (Nostradamus) பல்கேரிய குறிசொல்லி பெண்ணான பாபா வங்காவையும் (Baba Vanga) ஆதாரப்படுத்தி அச்சமூட்டத் தலைப்படுகின்றனர்.

ஆயினும், ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும்போதும் இந்த ஆண்டு 3ம் உலகப்போர் வெடிக்கும் என்பது உட்பட்ட சில திகில் ஆருடங்களை தாண்டித்தாண்டித்தான் வந்திருக்கின்றோம். இருப்பினும் இந்தப் பாழும் மனசு கேட்குதில்லையே! இதனால் இந்த ஆண்டு உக்ரைனியர்களுக்கு புட்டினின் அணுகுண்டுக் கண்டம் இருக்குமோ என்ற வினாவுடன் ஒரு திக்திக் அடிப்பு இருக்கத்தான் செய்யும்.

எது எவ்வாறோ, இந்த ஆண்டை உலகளாவிய பொருளாதார மந்தநிலை பாதகமாக வழிநடத்தப் போகின்றது என்பதை மட்டும் எல்லைகடந்த உலாவின் கணிப்பாக இப்போதைக்கு சொல்லிக் கொள்ளலாம். இந்த பொருளாதார மந்தநிலைக்கு ரஸ்யாவின் உக்ரைன் மீதான போரே அடித்தளமாக இருப்பதால், வினை விதைத்தவனே அதனை அறுக்கும் வகையில் இது ஒரு ஆபத்தான இருகருக்குப் பட்டயமாக பொருளாதார இழப்புடன் ரஸ்யாவையும் வெட்டக்கூடும்.

ஏனென்றால் மேற்குலகின் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் புட்டினால் இன்னும் எத்தனை மாதங்களுக்கு உக்ரைனில் கச்சை கட்டிக்கொண்டு போர் முரசு அறைய முடியும்? நிற்க முடியும்?

இன்னும் ஒன்றரை மாதங்களில் ரஸ்ய உக்ரைனிய போர்க்களம் தனது குரூரமான முதலாம் ஆண்டைக் கடக்கப்போகின்றது. ஆனால் இந்த ஒரு வருடத்துக்கு உள்ளாக நம்ம வீடுகளின் எரிவாயுவுக்கும் மின்சாரத்துக்கும் சற்றும் மனந்தளராத விக்ரமாதித்தன் பாணியில் அதிக பில்களை (கட்டணங்களை) கட்டிக்கட்டியே நொந்து போய்விட்டோம்.

உணவு பணவீக்கம் உட்பட்ட விலைவாசி உயர்வு எமது காசுப்பைகளை பதம்பார்த்து வறட்சியடைய வைத்துவிட்ட நிலையில் இன்னும் கண்டன உயர்வுகள் உண்டு பிள்ளாய் என்ற செய்திகள் ஈயத்தைக்காய்ச்சி ஊத்திக்கொள்கின்றன.

இதற்கிடையே பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றோம் பேர்வழி என ஐரோப்பிய மத்திய வங்கியும் ஏனைய மேற்குலக மத்திய வங்கிகளும் வட்டி வீதங்களை உயர்த்தி வருவதால் ஐரோப்பிய நாடுகள் கனடா அமெரிக்கா என எங்குமே பொருளாதார மந்தநிலை தீண்டல்கள். இதில் பிரித்தானியாவின் நிலையை சொல்ல வேண்டியதில்லை. கடந்த வருடம் அது பலதடைவைகள் வட்டிவீதங்களை உயர்த்தி மோட்கேஜ் எனப்படும் வீட்டு அடமானக்கடன் தொகை எகிற வைத்ததால் வீட்டு உரிமையாளர்கள் கைகளை பிசைகின்றனர்.

ஆனால் இடுக்கண் இன்னமும் முடியவில்லையே! ஒருவேளை ரஸ்யாவின் போர் இழுபட்டுச் சென்று அதன் தாக்கத்தால் கிரெம்ப்ளின் தளரத்தொடங்கினால், தைவானைக் கைப்பற்றும் தனது நோக்கம் காரணமாக ரஸ்யாவின் உதவிக்கு சீனா செல்லக்கூடுமா என்ற வினாவும், அதேபோல ரஸ்ய போர்க்களம் தாறுமாறான கட்டுப்பாட்டை மீறினால் அது நேட்டோவுக்கும் அதற்கும் இடையேயான நாசகார சிண்டுமுடிதலை தொடங்குமா என்ற வினாவும் உள்ளன.

ஒருவேளை இப்படியொரு சிண்டுமுடிதலும் மோதலும் வந்தால் உலகம் தற்போதைய அமெரிக்கா தலைமையிலான ஒற்றைத்துருவ ஒழுங்கிலிருந்து சீன - ரஸ்ய இரட்டைத்துருவ முறைக்கு மாறினால் உலகின் இராணுவ கூட்டுகள் மூலோபாய, வணிக உறவுகள் முதல் எல்லாமே மாற்றமடையக்கூடும்.

இவ்வாறு, ஒருவேளை ஆடிகாற்று அடித்து அதில் அம்மியே பறந்தால் - ஐயோ எனக்கு என்ன கதி என இலவம் பஞ்சு வினவியதைப்போல வினவும் ஏழை நாடுகளின் இன்னல்கள் இன்னும் எகிறி அங்கு வறுமையும் சமூக அமைதியின்மையும் அதிகரிக்கக்கூடும்.

இதனால், இப்போது பிச்சைப்பாத்திரமம் ஏந்தி வந்தேன் ஐயனே ஐயனே பாணியில் இலங்கை நிற்பதைப்போல மேலும் பல நாடுகள் தமது நிதி மீட்புக்காக அனைத்துலக நாணயம் உட்பட்ட முக்கிய மார்வாடி மையங்களில் வரிசைகட்டி நிற்கவேண்டியதுதான். சரிதான் நிறுத்துமையா! உமது கையில் வசம்பு வைத்து தேய்க்க!

ஏதோ புத்தாண்டு பிறந்திருக்கிறதே நல்லதாக நாலு வார்த்தையை எழுதுவீரெனப்பார்த்தால், எல்லை கடந்த உலாவில் எல்லை கடந்து பயமுறுத்தப் பார்க்கிறீரே! இது உமக்கு அடுக்குமா என உங்களில் சிலர் கோபிப்பது தெரிகிறது.

ஏதோ வந்தோமா, இந்த ஆண்டு அமைதி செழிப்பு மற்றும் நம்பிக்கைக்குரிய ஆண்டாக இருக்கக்கடவது என எழுதினோமா என இருந்தால், என்ன கேடுதான் வந்துவிடப் போகிறது என நீங்கள் நினைத்துக் கொள்ளலாம். அதுவும் சரிதான்! ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் - யாம் அது சொன்னால் பாவமாம். எனினும் பொல்லாப்பு எதற்கு?

தமிழர் தகவலை புரட்டும் உங்கள் அனைவருக்கும் 2023 நலத்தையும் வளத்தையும் வழங்கக்கடவதாக!



**Indran B. Indrakrishnan** MD FRCP (London); FRCP (C); FACP; FACG

# Food Poisoning

Food poisoning, also called foodborne illness, is an infection or irritation of the digestive system that spreads through food or drinks. Viruses, Bacteria, parasites, and harmful chemicals cause most food poisoning. It is most often a self-limiting illness meaning it happens suddenly and lasts only a short time. Most cases of food poisoning last less than a week, and most people get better on their own without treatment. In some cases, food poisoning can last longer or lead to serious complications. Some people are more likely to get food poisoning than others, including infants, children, pregnant women, older adults, and people with poor immunity. People in these groups are also more likely to have severe symptoms or complications of food poisoning. In some cases, food poisoning can lead to dehydration from nausea & vomiting or more serious complication like hemolytic syndrome affecting the blood and kidneys. However, serious complications are uncommon.

**Symptoms**

- Diarrhea sometimes mixed with blood.
- Vomiting
- Stomach pain
- Headache
- Fever

Rarely, some types of food poisoning like Botulism, fish & shellfish poisoning can affect the nervous system and the symptoms may include blurred vision, headache, paralysis, numbness of skin and weakness of arms/legs. People with nervous system symptoms should see a doctor or go to an emergency room right away.

**Causes**

- Unwashed Fresh Vegetables
- Raw or undercooked meat, poultry, and eggs
- Dairy products and fruit juices that have not been pasteurized (heated to kill harmful microbes)
- Fish and shellfish
- 'Deli Foods' such as sliced meat, salads and cut fruit, sandwiches, and baked goods.
- Processed and ready-to-eat meats such as hot dogs or deli meat
- Foods that are not properly canned or sealed

Viruses, Bacteria, parasites and sometimes chemicals are the underlying causes of food poisoning through contamination of food and water.

**Home care of food poisoning**

In most cases, people with food poisoning get better on their own without medical treatment. One can treat food poisoning by replacing lost fluids and electrolytes with water, fruit juices and sports drinks to prevent dehydration. Over-the-counter medicines may help relieve some symptoms. When the appetite returns, one can most often go back to eating the normal diet, even if the diarrhea continues. For some people, certain food ingredients may make food poisoning symptoms, such as diarrhea, worse. These ingredients include caffeine, fat & sweetened beverages and one may want to avoid consuming these items during the illness. When children have food poisoning, parents and caretakers should give children what they usually eat as soon as their appetite returns. Infants can be fed breast milk or formula as usual.

Research shows that following a restricted diet does not help treat diarrhea. Most experts do not recommend fasting or a restricted diet during diarrhea.

**Prevention of food poisoning**

- Keep raw meat, poultry, seafood, and eggs separate from other foods
- Promptly refrigerate or freeze foods that can spoil
- Wash the hands with soap and water before and after handling food
- Wash fruits and vegetables before eating, cutting, or cooking
- Cook foods long enough and at high enough temperatures to kill harmful microbes
- Wash utensils and surfaces after each use
- Avoid eating foods that can spoil that have been sitting out for more than 2 hours, or in temperatures over 90 degrees, for more than 1 hour

**Dr. Indran B. Indrakrishnan**
Adjunct Professor of Medicine - Emory University School of Medicine
GDC Endoscopy Center LLC and Gwinnett Digestive Clinic PC
475 Philip Blvd, Suite # 304, Lawrenceville, GA 30046
www.GDCEndoscopy.com

# அவதூறுகளைப் பரப்பும் சமூக ஊடகங்களுக்கு ஒரு படிப்பினை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளன முன்னாள் தலைவர் அஜித் சபாரத்தினம் தொடுத்த அவதூறு வழக்கின் தீர்ப்பு



கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் சமூகத்தில் நன்கறியப்பட்ட பொதுச்சேவையாளருமான திரு. அஜித் சபாரத்தினம் மீது சமூக ஊடகங்களினூடாக அவதூறு தெரிவிக்கப்பட்டதற்கு எதிராக அவரால் தொடுக்கப்பட்ட வழக்கில் ஒன்றாறியோ உயர் நீதிமன்றம் இரு வெவ்வேறு திகதிகளில் கூடி, அஜித் சபாரத்தினத்துக்கு நட்ட ஈடாக மொத்தம் 123,000 டாலர்களை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நட்ட ஈட்டுத் தொகை பின்வரும் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது:

1. 2022 ஆகஸ்ட் 18ம் திகதியின்படி பொது நட்ட ஈடாக 75,000 டாலர்கள் தண்டனையாகவும், முன்மாதிரியாக மற்றவர்கள் இவ்வாறான செயல்களை தடுக்கும் முகமாக 25,000 டாலர்கள் தண்டப் பணமாகவும் விதிக்கப்பட்டுள்ளது.
2. 2022 நவம்பர் 22ம் திகதியின்படி வாதியான அஜித் சபாரத்தினத்துக்கு, கணபதிப்பிள்ளை யோகநாதன், MK. Tamil, 2137534 Ontario corp உம், Paraii (பறை) Media Group உம், Paraii.com பிரதிவாதிகளும் பகுதியான நட்ட ஈடாக 23,000 டாலர்களை வாதிக்கு (அஜித் சபாரத்தினத்துக்கு) வழங்குமாறு உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இத்தொகைகள் யாவும் 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டுமென்று நீதிபதியினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் மேலதிக நிபந்தனைகளையும் உத்தரவுகளையும் பார்வையிட, கீழே தரப்பட்டுள்ள நீதிமன்ற கோவை இலக்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

Citation: Sabaratnam V Mooka, 2022 ONSC 4779

Court File No: CV-19-00633610-0000
Date 2022 August 18

Citation: Sabaratnam V Mooka, 2022 ONSC 6552

Court File No: CV-19-00633610-0000 Date 2022 November 22

# ஒருவர் இறந்த பிறகு அவருடைய சமூக வலைத்தள பக்கங்கள் என்னவாகும்?

சமூக வலைத்தள பக்கங்கள் இன்று பலருக்கும் மிகவும் முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது. குறைந்தபட்சம் ஒருவர் இரண்டு மூன்று சமூக வலைத்தள பக்கங்களையாவது பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், இறந்த பிறகு இந்த கணக்குகள் என்ன ஆகும் என்ற கேள்வி பலருக்கும் உண்டு.

நாம் இறந்த பிறகு என்ன நடக்கிறது என்பதனை நம்மால் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால், பேஸ்புக், மைக்ரோசொப்ட், வாட்ஸ்அப் மற்றும் பிற தொழில்நுட்ப நிறுவனங்களின் என்ன கொள்கைகளை வைத்துள்ளது என்பதனை பார்க்கலாம்.

### ஃபேஸ்புக்:

ஒருவர் இறந்த பிறகு அவர்களின் கணக்குகளை நிர்வகிக்க பேஸ்புக் பல விருப்பங்களை வழங்குகிறது. அதன்படி, கணக்கை நினைவுபடுத்தவும் அல்லது நிரந்தரமாக நீக்கப் பரிந்துரைக்கும், குடும்ப உறுப்பினர்கள் பேஸ்புக்கிலிருந்து இறந்தவரின் கணக்கை அகற்றக் கோரலாம். அப்படிக் கோரும்போது புகைப்படங்கள், செய்திகள், இடுகைகள் மற்றும் கருத்துகள் அனைத்தையும் பேஸ்புக் நீக்கிவிடும்.

### ட்விட்டர்:

இறந்தவரின் கணக்கை நீக்கப் பரிந்துரைக்கும். அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது குடும்ப உறுப்பினர் இறப்புச் சான்றிதழ் மற்றும் அடையாளச் சான்றிதழை வழங்கி கணக்கை அகற்றலாம்.

### வட்ஸ்அப்:

குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு கணக்கு நீக்கப்படும். ஆனால், ஒருவரின் மரணத்திற்குப் பிறகு கணக்கைக் கவனித்துக்கொள்ள அங்கீகரிக்கிறது. இருப்பினும், இது 120 நாட்கள் செயலற்ற கொள்கையைக் கொண்டுள்ளது. அதாவது கடந்த நான்கு மாதங்களாக வட்ஸ்அப் கணக்கு இணையத்துடன் இணைக்கப் - படாமல் இருந்தால், அந்தக் கணக்கு தானாகவே நீக்கப்படும். ஆனால் பயன்பாட்டை நீக்கும் வரை ஸ்மார்ட்போனில் சேமிக்கப்பட்ட எல்லா தரவும் இருக்கும்.

### இன்ஸ்டாகிராம்:

பேஸ்புக்கைப் போலவே, இன்ஸ்டாகிராமும் பயனர்கள் இறந்த பிறகு தங்கள் கணக்குகளை நினைவுகூர அனுமதிக்கிறது. நினைவூட்டப்பட்ட கணக்கில் யாரும் உள்நுழைய முடியாது, அவர்களின் சுயவிவரத்தில் நபரின் பெயருக்கு அடுத்ததாக ‘நினைவுபடுத்துதல்’ என்ற சொல் காட்டப்படும். இறந்த நபர் பகிர்ந்த அனைத்து புகைப்படங்களும் வீடியோக்களும் சுயவிவரத்தில் இருக்கும்.



கனகேஸ்வரி நடராஜா

# கட்டைவிரல்

சில நாட்களுக்கு முன்னர் கவனக்குறைவாக கதவைச் சாத்தும்போது எனது கட்டைவிரல் நன்றாக அதற்குள் அகப்பட்டு நசுங்கி கண்டிப் போய் விட்டது. நான் பட்ட அவஸ்தைக்கு அளவேயில்லை. உடம்பின் ஓர் உறுப்பில் நோய் ஏற்படும்போதுதான் அதன் முக்கியத்துவம் எமக்கு விளங்கும். பற்களைத் துலக்க தூரிகையைப் பிடிக்க முடியவில்லை. தலைமயிரை வாருவதற்கு சீப்பைப் பிடிக்க முடியவில்லை. பேனாவைப் பிடித்து சில சொற்கள்கூட எழுத முடியவில்லை. மொத்தத்தில் எனது செயற்பாடுகள் யாவுமே முடங்கிப்போய் விட்டன. நுட்பமான விடயங்கள் தொடக்கம் பாரிய செயல் எதனையும் செய்வ-தென்றாலும் கட்டைவிரலின் உதவியில்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது. இதுதான் சிருஷ்டியின் மகிமை.

இந்தியாவின் அப்பல்லோ மருத்துவமனையைச் சார்ந்த இருதய சிகிச்சை நிபுணர் சாயி சதீஸின் உரைகள் இன்று யூரியுப் வழியாக பலராலும் மிகவும் விரும்பப்படுகிறது. அவர் ஒரு கத்தி கொண்டு மிகவும் நுணுக்கமான சத்திரசிகிச்சையை செய்வதென்றால் கட்டை விரலின் உதவியின்றி செய்ய முடியாது. பாரிய மலை ஒன்றைப் பிளப்பதென்றாலும் கட்டை-விரலின் உதவி கட்டாயம். எந்தவொரு நுணுக்கமான விடயத்தைச் செய்வதென்றாலும், கடினமான வேலையைப் புரிவதென்றாலும் கட்டைவிரலை ஏனைய விரல்களோடு இணைத்து இயக்குவதன் மூலமே அதனை நிறைவேற்றுவதை அருகமைவு (Apposition) என்று அழைப்பதாக அவர் கூறுகிறார். இத்தகைய ஓர் ஆற்றல் மனிதரிடம்தான் காணப்படுவதாகவும் தெரிவிக்கிறார்.

மனித வரலாறு பற்றி எழுதிய ஜோர்ஜ் தொம்சன் என்னும் ஆய்வாளர், கட்டைவிரல் மற்ற விரல்களிலிருந்து என்று பிரிந்ததோ அன்றுதான் மனிதகுலம் இயங்க ஆரம்பித்தது என்கிறார். இதன் உட்கருத்தை நோக்குவோ-மாயின் இறைவனின் சிருஷ்டியில் கட்டைவிரல் பிரிந்துதான் இருந்தது என்பது தெரியவருகிறது. அவ்வாறு அமைந்திராவிட்டால் மனிதனால் இயங்க முடியாது போயிருக்குமென்பதை இதனால் உணர முடிகிறது.

துரோணாச்சாரியார் பாண்டவர்களுக்கும் துரியோதனர்களுக்கும் வில்வித்தை கற்றுக் கொடுத்தவர். வில்வித்தையில் அர்ஜுனன் மிகவும் திறமைசாலியாக விளங்கினான். வில்லுக்கு விஜயன் என்ற பட்டத்தை அர்ஜுனன் எப்படியும் பெற்றுவிட வேண்டுமென துரோ-ணாச்சாரியார் பேரவா கொண்டிருந்தார். தனது மகன் அசுவத்தாமனுக்குக்கூட கற்றுக் கொடுக்-காத வில்வித்தைகளை அர்ஜுனனுக்கு கற்றுக் கொடுக்கிறார். இதேவேளை ஏகலைவன் என்ற சிறுவன் துரோணாச்சாரியாரை மானசீக குருவாக மனதில் நினைத்து வில்வித்தையில் மிகுந்த திறமைசாலியாக விளங்கி வருகிறான். இதனை அறிந்த துரோணாச்சாரியாருக்கு ஏகலைவன் அர்ஜுனனுக்குப் போட்டியாக அமைந்து விடுவானோ என்ற பயம் ஏற்படுகிறது. இதனால் குரூர எண்ணம் அவருக்கு ஏற்படுகிறது. ஏகலைவனின் கட்டைவிரலை குருதட்சணையாகக் கேட்கிறார்.

அச்சிறுவன் எந்தவித தயக்கமுமின்றி தனது கட்டைவிரலை வெட்டி குருவிடம் காணிக்கை-யாகச் சமர்ப்பிக்கிறான். மகாபாரதத்தில் இது உபகதையாக வருகிறது. துரோணாச்சாரி-யாரின் சாணக்கிய தந்திரத்தை மிகக்கொடூரமானதென கருதுபவர் பலர் உண்டு. அதேசமயம் அரசகுலத்தில் இத்தகைய பலப்பரீட்சைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை எனக் கொள்வோரும் உண்டு. எது எப்படியிருந்தாலும், வில்வித்தைக்கு கட்டைவிரல் இன்றியமையாதது என்பது இதனால் புலனாகிறது. ஏகலைவன் என்று தனது கட்டைவிரலை துரோணாச்சாரியாருக்கு காணிக்கையாகக் கொடுத்தானோ அன்றே அவனின் வில்வித்தை முற்றுப்புள்ளியானது.

பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் காலனித்துவ நாடாக இந்தியா விளங்கியவேளை இந்தியர்கள் அனுபவித்த இன்னல்கள் அளப்பரியவை. இந்தியாவின் நெசவாளர்கள் சிலர் அக்காலத்தில் மிகவும் மென்மையான பட்டுத்துணிகளை நெசவு செய்யும் வல்லமை படைத்திருந்தனர். முழுநீள பட்டுச்சேலை ஒன்றை ஒரு மோதிரத்தினூடாக செலுத்தும் அளவுக்கு அது மென்மையாக இருந்தது. ஆனால் அதனைத் தயாரிக்கும் முறை குடும்ப ரகசியமாகப் பேணப்பட்டு வந்தது.

அதன் செய்முறையை தங்களுக்குச் சொல்லித் தருமாறு பிரித்தானியர்கள் கேட்டபோது நெசவாளர்கள் மறுத்துவிட்டனர். கோபம் கொண்ட பிரித்தானியர் அத்தனை நெசவாளர்-களின் கட்டைவிரல்களை வெட்டி விட்டனர். அத்துடன் அந்தப் பட்டுச்சேலைகளின் தயாரிப்பு அகால மரணமானது. கட்டைவிரலால்தான் நூலை நுணுக்கமாகக் கையாண்டு பட்டுச்சேலைகளை தறியில் அவர்கள் செய்து வந்தனர். இந்தக் கதையின் நம்பகத்தன்-மைக்கு உத்தரவாதம் இல்லையாயினும், கட்டைவிரலின் மகத்துவத்தை இது புரிய வைக்கிறது.

ஆஸ்திரேலியாவில் குட்டிக் கரடி போன்ற ஒரு மிருகம் கயோலா (Kaola) என்ற பெயரில் காணப்படுகிறது. சிட்னியில் கயோலா பூங்காவனம் உண்டு. இந்த மிருகம் உருவத்தில் சிறிய நாய் அளவுள்ளதாக இருக்கும். நாளொன்றுக்கு சுமார் 16-20 மணித்தியாலங்கள் மரக்கொப்பை இறுக்கிக் கட்டிப்பிடித்தபடி நித்திரை கொள்ளும். புயல்காற்று, பெருமழை, பூமி நடுக்கம் எது இடம்பெற்றாலும் இந்த மிருகம் மரத்திலிருந்து விழமாட்டாது. இவ்வாறான இரும்புப் பிடியாக இது இருப்பதற்கு இதன் முன்னங்கால்களிலுள்ள இரண்டு கட்டைவிரல்களுமே காரணம். மரத்தோடு மரமாக இந்த விரல்களே கயோலாக்களை ஒட்டி வைத்துவிடுகின்றன.

எமது விரல்களின் நுனியில் காணப்படும் ரேகைகள் இருவருக்கு ஒரே மாதிரி அமைவதில்லை. அதனால்தான் கட்டைவிரலின் அடையாளம் கையொப்பத்துக்குச் சமனாக ஏற்கப்படுகிறது. எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்கள் அக்காலத்தில் தங்கள் கையொப்பத்துக்கு பதிலாக கட்டைவிரல் அடையாளத்தையே அதிகாரபூர்வமாக பதிவு செய்தனர். மரணச்சாசனத்திலும்கூட கட்டைவிரல் அடையாளம் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சில குழந்தைகளுக்கு சிறுவயதில் விரல் சூப்பும் பழக்கம் இருப்பதைப் பார்த்திருக்கிறோம். அநேகமானவர்கள் கட்டைவிரலையே சூப்புவார்கள். சில குழந்தைகளுக்கு அவ்வாறு செய்தால்தான் நித்திரை வரும். அத்துடன் பாதுகாப்பு உணர்ச்சியும் மனஅமைதியும் ஏற்படுவதாக மூத்தோர்கள் சொல்வார்கள்.

இன்றைய நாட்களில் செய்திகளை விரைவாகவும் சுருக்கமாகவும் அனுப்ப கணினி மொழியை பயன்படுத்துகிறோம். இதற்கு கட்டைவிரலை உயர்தியபடியும், ஏனைய விரல்-களை மூடியபடியும் இருக்கும் அடையாளம் நன்றி, வெற்றி, அபாரம் என்ற சொற்களுக்குப் பதிலாக பாவனையில் உள்ளது. நேரில் ஒருவரை சந்திக்கும்போதுகூட கட்டைவிரலை உயர்த்தியே எமது மகிழ்ச்சியை காட்டுகிறோம். இவ்வாறான மகிமைகளைக் கொண்ட கட்டைவிரலின் முக்கியத்துவத்தை அதில் ஏதாவது பாதிப்பு வரும்போதுதான் உணர்ந்து கொள்கிறோம்.



இரா. சம்பந்தன்

# குறுந்தொகை காட்டிய குடும்பமும் அன்பும்!

காலை நேரம். கதிர் முதிர்ந்து சுட்டெரிக்கும் வேலைக்கு இடங்கொடுக்க விரும்பாத ஒரு கிழவி தான் ஊன்றும் கோலை அகல வைத்து கூன் முதுகு சுமந்து நிற்கும் காலை அடுத்து வைத்து ஆயர் குடி நிறைந்த காட்டுவழி நடந்திட்டாள் தன் கையால் வளர்த்த பெண்ணைத் தனிமனை -யில் காண்பதற்கு.

காதல் மலர்ந்து அதனால் கலவரங்கள் உருவாகி சாதல் விளிம்புவரை சங்கடங்கள் கொடுத்தாளைத் தடுத்து வைத்து ஆதல் இனியொன்றும் அடைவதற்கு இல்லையென போக விட்டாலும் பொல்லாத மனம் தாய்க்கு. புழுப்போலத் தினம் துடிக்கும்.

மகளே எனநினைக்கும் அது. மனத்திரையில் முகம் பார்க்கும். தவளத் தெரியாத கன்றுக்கு வயல் உழவா திகிலில் தவித்திருக்கும். திரும்பாது அடம் பிடிக்கும். காதலாம் காதல் கணப்போது கோவிக்கும். குளிரும் அடுத்த கணம். குரலெடுத்து ஓலமிடும். பார்த்தாள் அப்பெண்ணை வளர்த்து வந்த செவிலித் தாய்.

பதறாதே நான்சென்று பார்த்து வருகின்றேன் எனச் சொல்லிப் புறப்பட்டாள் அக்கிழவி. அவர்கள் போனவழி தெரியவில்லை. வழிகேட்டு நடந்திட்டாள். பெற்றவரை விடுத்து வந்து புதிசாய் மணமுடித்த சிறிசுகளைத் தேடுகிறேன். கேட்டறிந்தாள் அக்கிழவி தம் குழந்தை வாழுமிடம்.

கைப்பிடித்த கணவனது கட்டழகுக் குடிசைக்கு தைத்துவைத்த முட்கதவைத் தட்டினாள் அக்கிழவி தானூன்றும் தண்டாலே. கீச்சென்று ஒலியெழுப்பித் திறந்துகொண்ட கதவை முந்தி அப்பாச்சி எனத் துள்ளிக் கூச்சலிட்டாள் அப்பெண்ணாள். கணவனும் வந்தாச்சி வா உள்ளே எனச்சொன்னான். ஆச்சி கால் வைக்கும் முன்னாலே அன்பு பிடித்திழுத்து தப்பொன்றும் இல்லாமல் தமிழ் வழக்கை எடுத்துரைக்கும்.

சமைக்கிறேன் அப்பாச்சி சற்றுப் பொறுத்துக்கொள். இமைவெட்டிக் கண்ணாலே இரு என்று பாய் போட்டாள். குடிக்க மோர் கொடுத்தாள். கொடுத்தாள் பாக்குரலை. கட்டிவைத்த வெத்திலையை எடும் என்றாள் கணவனிடம்.

உறைந்து கல்லான உறிகிடந்த மோர் பிசைந்தாள். குலைந்து நிலமசைந்த உடுபுடவைக் கொய்யகத்தை மோர் பிசைந்த காந்தள் ஐந்துவிரல் கைகழுவ நேரமின்றி அள்ளிச் சரிசெய்தாள். காட்டு மரமொடித்துக் காயவைத்த விறகெடுத்து அடுப்பருகே குந்தி இருந்தவளும் குவளை மலர் போன்ற கண்ணுள்ளே புகை செல்ல கவலை எதுவுமின்றி ஊதி அடுப்பெரித்தாள்.

அடுப்பு வைத்த சட்டியிலே இட்டதயிர் அளவை விட பலமடங்கு புளியெடுத்து கொட்டிக் கலக்கியவள் தனைப்பார்த்து உதையெல்லாம் உன்கணவன் உண்பானா எனக்கேட்க உன்னினாள் கிழவி. உதடுகளோ திறக்கவில்லை.

மோர்க்குழம்பும் சோறும் அப்பாச்சி உனக்கென்றாள். திகைத்தாள் கிழவி. தப்பிக்க வழி பார்த்தாள். என்ன பழக்கமெடி ஆம்பிளைகள் வீடிருக்க பெண்கள் உண்பதுவா உன்னவனுக்கு கொடு முதலில் என்றாள். சிரித்துவிட்டு அப்பெண்ணும் கணவனுக்கு இலை போட்டாள்.

ஒருவாய் உண்டுவிட்டு ஓடுவான் புருசனென எதிர்பார்த்த ஆச்சிக்கு ஏமாற்றம். அள்ளியுண்டு அவன் தனது மனைவியிடம் அருமையாய் இருக்கென்ற அன்பு வார்த்தைகளை ஆச்சி செவி கேட்டாள். உண்மையிலே வாந்திவரும் ஒரு உணவை சமைத்தவளை திண்ணையிலே இருத்தி வைத்துத் திட்டிமனம் வருத்தாமல் அன்புக்கு இடம் கொடுத்த ஆடவனை ஆச்சி கண்டாள்.

அந்த வார்த்தையைக் கேட்டு உண்மையாகவா என்று மகிழ்ச்சியால் மேலும் முகம் மலர்ந்த தங்கள் வீட்டுப் பெண்ணை ஆச்சி பார்த்தாள். தன்னைக் கேட்டிருக்கலாம். ஆச்சி முறையாகச் சொல்லிக் கொடுத்திருப்பாள். அவள் கேட்கவில்லை.

என்னவனுக்கு என் கையால் சமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு அன்பின் எழுச்சியையும் நீ என்ன செய்து தந்தாலும் நான் குற்றம் காணாமல் சாப்பிடுவேன் என்ற இன்னொரு அன்பின் பக்குவத்தையும் ஆச்சி மெய்மறந்து பார்த்தாள்.

போடு பிள்ளை இலையென்றாள். புரிந்துகொண்டு சாப்பிட்டாள். வயிறு நிறைவதற்குள் மனம் நிறைந்த ஆச்சியவள் சிந்தித்தாள். இப்படியோர் வாழ்வுதனை இயற்றும் இந்தச் சிறிசுகளை எப்படியோ அழ வைத்து என்னவெல்லாம் செய்தோம் நாம். பொருள் படைத்தோர் வீடுகளில் பொண்ணுகளாய் பிறந்து விட்டால் இருள் வாழ்வுப் பாதையைத்தான் இணைக்கின்றோம் அவர்களுடன்.

வீடு வசதியில்லை. வேண்டும் உடை அதிகமிலை. தோடு மணிநகைகள் தொடுவதற்கும் வசதியில்லை. பத்துக் கறிசமைத்துப் பசியாறப் பணமுமில்லை. ஓலைப் பாயும் ஒருபானை சட்டியுடன் ஒற்றுமையாய் வாழும் இவர்களது மனம் முழுக்க நிறைந்த அன்பிருக்கு. நிம்மதியும் பூத்திருக்கு.

போயிவர்கள் பெற்றவர்கள் செவியெறிய வேண்டுமிதை. கற்பனையில் தீர்வெழுதிக் காதலை நீர் குழப்பாதீர். சேய்களது வாழ்க்கையெலாம் சிறந்துவிடும் காதலினால்! போய்ப்பாரும் நும்மகளை என்றுரைக்க வேண்டுமென்றாள்.

விடைபெற்றாள் அப்பாச்சி விளக்குவைக்கும் நேரமதில். தடையாக தான் நின்று அவர் சுகத்தைக் குழப்பாமல்! நடையைத்தான் விரைவாக்க நம் கிழவி முயன்றாலும் அவர் வீட்டு சுமையொன்று அவள் முதுகில். அதற்குள்ளே அன்பு மட்டும்!

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ

குவளை உண்கண் குய்ப் புகை கழுமத்

தான் துழந்து அட்ட தீம் புளிப் பாகர்

இனிது எனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்நுதல் முகனே

**(சங்க இலக்கியம் குறுந்தொகை 167 - பாடியவர் கூடலூர் கிழார்)**



பொன்னையா விவேகானந்தன்

# மரபும் மாண்பும் 31

## பண்பாட்டு நோக்கில் கோலம்

தாயகத்தில் தமிழர்களின் வீட்டுவாசல்களை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் கோலமிடுதல் தமிழர்களின் பண்பாட்டுத் தொடர்ச்சியின் அடையாளமாகவே இன்று நோக்கப்படுகின்றது. ஈழத்தில் பொங்கல், திருமணம் போன்ற நிகழ்வுகளில் கோலமிடுதலைப் பெருமளவில் காணலாம். தமிழகத்தில் நகர்ப்புறம் தவிர்ந்த மக்கள் வாழ்விடங்களில் கோலமிடுதல் நாள்தோறும் நிகழ்கின்றது.

கோலமிடுதல் பின்னாட்களில் ரங்கோலி என்ற பெயருடன் இந்தியாவெங்கும் பரந்திருந்தாலும் அதன் தாய்வீடு தமிழகமென்றே கருதுகின்றனர். தமிழகக் கிராமங்களின் வீட்டு முற்றங்களில் நாள்தோறும் எழுகின்ற கோலங்கள் வடஇந்தியாவில் இல்லை.

கோலமிடுதல் எப்போது தோன்றியது? இந்தப் பெயர் எவ்வாறு உருவானது என்பது பற்றிய கருத்துகளை இலக்கியச் சான்றுகளுடன் சற்றே நோக்குவோம்.

### கோலக்கலை - தோற்றம்

கோலக்கலையானது பண்டைத் தமிழர்களுடைய குறியீடுகளைப் பயன்படுத்தும் வழக்கத்தில் இருந்து தோன்றியிருக்கலாம் என ஆய்வாளர் பவுன்துரை இராசு தன்னுடைய பண்டைத் தமிழக வரைவுக -ளும் குறியீடுகளும் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். சிந்துவெளி பள்ளத்தாக்குக் கண்டுபிடிப்புகளில் குறியீடுகள் காணப்படுகின்றன. மொழி வளர்ச்சி நிலையை அடையமுன் மாந்தர் தொடர்பாடலுக்குக் குறியீடுகளையே பயன்படுத்தினர். மாடுகளுக்குக் குறியிடும் வழக்கம் அன்றே உருவானதுதான்.

மாந்தர் நாகரிக வளர்ச்சியின் தொடக்க காலத்தில் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தலைப்பட்டனர். அவர்கள் கட்டிய குடில்கள் எல்லாம் ஏறக்குறைய ஒரேமாதிரியாக இருக்கவே, அவற்றை அடையாளம் காண்பதற்கு வீட்டுக்கு முன்னால் குறி இட்டிருக்கலாம். இக்குறியிடுதலின் தொடர்ச்சியான வளர்ச்சியே இன்றளவில் நாம் கோலக்கலை எனக் கருதுமளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. கோலத்துக்குப் புள்ளிகளும் கோடுகளுமே அடிப்படை. சிந்துவெளி அகழ்வாய்வுப் பொருட்களில் புள்ளிகளும் கோடுகளும் கணிசமாகவே காணப்படுகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களை ஆராயுமிடத்து, கோலம் என்ற சொல் நேரிடையாகப் பொருள் தரும் சொல்லாட்சிகளைக் காணமுடியவில்லை என்கின்றார் ஆய்வாளர். ஆனால் வரி என்ற சொல் ஏறக்குறைய கோலம் என்ற சொல்லுக்கு ஒப்பான பொருளைத் தரும் இலக்கியச் சான்றுகள் உள்ளன.

'...தைஇ
வரிபுனைச் சிற்றில் சிதை, வந்து..'
' ..ஓங்குமணல்
வரிஆர் சிறுமனை சிதை, வந்து'

கோலம் வரையப்பட்ட சிறுமனை என்பது இந்த வரிகளின் பொருள். நற்றிணை என்ற நூலில் இடம்பெற்றிருக்கும் வரி என்ற இந்த சொல்லாட்சி கோலத்தையே குறித்து நிற்கின்றது எனக் கொள்ளலாம்.

கோல் என்ற சொல் சங்கப்பாடல்களில் அழகு, வடிவம், ஒப்பனை என்ற பொருள்களில் கையாளப்பட்டிருக்கின்றது.

கோல் அமை விழுந்தொடி விளங்கக் சைவீசி என்ற அகநானூற்று (162) வரியில் கோல் என்ற சொல் அழகு என்ற பொருள்படக் கையாளப்பட்டிருக்கின்றது. இந்த சொல்லாட்சியைப் பல்வேறு பாடல்களிலும் காணலாம். இல்லங்களின் முன்றலில் இடப்பட்ட வரிவரைவுகள் பின்னாட்களில் அழகுணர்வோடு புதுவடிவம் பெறத் தொடங்கியதன் பின்னர் (கோல் +அம்) கோலம் எனப் பொருள் கொண்டிருக்கலாம் எனவும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

கோலம் என்ற சொல்லாட்சியை முதன்மதலாக நேரிடையாகப் பயன்படுத்தியவர் குமரகுருபரர். அவர் எழுதிய மீனாட்சியம்மை குறம் என்ற நூலில்'தரை மெழுகிக் கோலமிட்டு'எனக் குறிப்பிடுகின்றார்.

கட்புலக் காட்சித் தொடர்பியலாகத் (visual communication) தொடங்கிய இந்த வரைபுகள் காலஓட்டத்தில் சமுதாயப் பண்புகளை வெளிப்படுத்தும் பதிவுகளாகவும் ஆழம் பெற்றிருப்பதை நாம் காண்கின்றோம்.

### கோலம் பற்றிய நடைமுறைகள்:

பொதுவாக கோலமிடுவதற்கு வெண்ணிறமான அரிசிமாவையே பயன்படுத்தி வந்து -ள்ளர். சுண்ணாம்பு போன்ற பிற வெண்ணிறப் பொடிகள் நுண்ணுயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவை. அரிசிமா அவ்வுயிர்களுக்கு உணவாகக் கூடியது. பின்னாட்-களில் வடநாட்டுப் பண்புகளும் கலந்துவிட கோலங்கள் வண்ணமயமாகிவிட்டன.

அதிகாலையில் எழுந்து கோலமிட்ட பின்னரே அடுப்பைப் பற்ற வைக்க வேண்டும் என்ற மரபு தமிழகத்தில் இன்றும் பின்பற்றப்படுகின்றது. முற்காலத்தில் அடுப்புக்குக் -கூட கோலமிட்டு வந்துள்ளனர். தெற்குத் திசை பார்த்தோ, தெற்கில் முடியுமாறோ கோலம் இடக் கூடாது என்ற மரபும் வழக்கத்தில் உண்டு. பெண்கள் குனிந்து கோலம் இட வேண்டுமே தவிர, அமர்ந்திருந்து கோலம் இடக் கூடாது என்ற விதியும் உண்டு. வீட்டிலிருந்து யாராவது வெளியே புறப்பட முன்னரே கோலமிட வேண்டும்.

மங்கல நிகழ்வுகளுக்கும் துக்க நிகழ்வுகளும் இடப்படும் கோலங்களில் வேறுபாடு உண்டு. மங்கல நிகழ்வுக்கான கோலங்கள் இரட்டைக் கோட்டையும் துக்க நிகழ்வுகளுக்கான கோலங்கள் ஒற்றைக் கோட்டையும் கொண்டிருக்க வேண்டும். இறப்பு நிகழ்ந்த வீட்டில் பதினாறு நாட்களுக்குக் கோலம் இடக்கூடாது எனவும் இறந்தவர்களுக்கு திதி கொடுக்கும் நாளிலும் கோலமிடக்கூடாது எனவும் மரபுகள் இருந்திருக்கின்றன.

அமாவசையன்று கோலமிடுவதில்லை. அமாவாசையில் முன்னோர்கள் வீட்டுக்கு வருவதாக ஒரு நம்பிக்கை உண்டு. அவ்வாறு வருவோரை கோலம் தடுத்துவிடும் எனத் தமிழர் நம்பினர். கோலம் தெய்வநிலை சாராத தமிழர்களின் பண்பாட்டு மரபுகளில் ஒன்றாகவே கிராமங்களில் போற்றப்பட்டு வருகின்றது. நகர்ப்புறங்களில் கோலம் இன்று தெய்வ வழிபாட்டுடன் பிணைத்தும் நோக்கப்படுகின்றது. ஆரியத் தாக்கமே இதற்குக் காரணம் என அடித்துக் கூறலாம்.

கோலமிடுதலின் பயன்களை ஆய்வாளர் பேரா. ருக்மணி பின்வருமாறு கூறிப்பிடு -கின்றார்: "நம் கோலங்கள் தமிழினத்தின் பழமையைப் பகரும் பண்பாட்டைச் சொல்லும் வளமையைத் தெரிவிக்கும். வருத்தத்தைக் குறிக்கும். வாழ்வியலைக் கூறும். விழாக்களை உரைக்கும். மகிழ்ச்சியினைப் பரிமாறும். மரணத்தை அறிவிக்கும். உடற்பயிற்சியினை நல்கும். உயிரினங்களுக்கு உணவளிக்கும்'

எமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கோலமிட்டு மகிழ்வோம். பண்பாடு காப்போம்.



குயின்ரஸ் துரைசிங்கம்

# தெரிந்ததில் தெரிந்தது - 4

## எம் முதியோரிடம் தொலைந்துபோன தைரியம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பிள்ளை வளர்ப்பு பற்றிய எந்தப் பட்டறிவும் தரப்படவில்லை. வயது வந்த உறவுகளை வீட்டில் பராமரிப்பது எப்படி என்ற முன் அனுபவம் எதுவுமில்லை. உங்களது வயதுவந்த உறவுகளை மட்டுமல்ல, புதிதாக அறிமுகமான, இதுவரை யாரென்றே தெரியாத வயது முதிர்ந்த உறவுகளையும் அதே அன்போடு பராமரிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை. எல்லாவற்றையும் வெற்றியோடு கடந்து வந்தீர்கள். சவால்கள் நிறைய இருந்தாலும் நீங்கள் யாரும் சளைக்கவில்லை.

பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவது என்பது மேற்குலக நாடுகளில்போல இலகுவானது அல்ல. அங்கே, எதற்கும் பணம் வேண்டும். பணம் இல்லாவிட்டால் எல்லோரிடமும் பல்லைக் காட்ட வேண்டிய நிலை. கடன்வாங்கி, வட்டிக்கு காசு எடுத்து, தினமும் போராட்டமாகவே கழிகிறது. காலையில் ஏதாவது வாங்கி வந்து, பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் பசி தீர்ப்பதே ஒரு பெரிய போராட்டம். ஆனால், அன்றைய நாளுக்கு அதுதான் ஆரம்ப போராட்டம். காலை உணவு மட்டுமல்ல, மதிய உணவு, இரவுணவு, பாடசாலைக்கு பார்சல். பஸ் ரிக்கட் செலவு. மாதாந்த கட்டணம். புத்தகம், கொப்பி, பென்சில், இரேசர். இப்படி பல வருடங்களை நகர்த்த வேண்டும்

பாடசாலைக் காலம் முடிந்தால், பிள்ளைக்கு ஏதாவது ஒரு வேலை பெற்றுக் கொடுக்க எத்தனை பேர் காலைப் பிடிக்க வேண்டும்? வெளிநாட்டுக்கு அனுப்பலாம் என்பதற்காக, எத்தனை அடகுக் கடை ஏறவேண்டி இருந்திருக்கும். பல சவால்கள், தோல்விகள், ஏமாற்றுதல்கள். பாஸ்போர்ட் எடுக்க, கொழும்பு போக காசு, எதற்கெடுத்தாலும் பணம் வேண்டும்.

நாட்டின் போர்ச்சூழல். செல் அடி, இடப்பெயர் - வுகள். ஆமியின் அட்டகாசம். பிள்ளையை ஆமி பிடித்துக் கொண்டுபோன துன்பம், சுற்றிவளைப்பு, பிள்ளைகளோடு தொடர்பற்ற சூழ்நிலை. குடும்ப உறுப்பினர்களின் நிரந்தர பிரிவுகள், இழப்புக்கள். எத்தனை புதிய புதிய சூழலை நீங்கள் வெற்றியோடு கடந்து வந்தீர்கள். ஒன்று இரண்டல்ல. ஓராயிரம் சுமைகளை வெற்றியோடு முகம்கொடுத்து சமாளித்தீர்கள்.

கணவர்களும் அப்படித்தான். இந்த சுமைகளை கடப்பது என்பது இரு தரப்புக்கும் இரு வேறு விதமாக விரிந்து சென்றாலும், சவால்கள் குடும்ப வாழ்வில் இருவருக்கும் ஏற்பட்டிருக்கும். புதிய வேலையில் பல்வேறு சிரமங்களைச் சந்தித்தாலும், மனைவி பிள்ளைகளைப் பட்டினிபோட வேண்டுமே என்ற அச்சத்தில், பிள்ளைகளின் படிப்பு கெட்டுவிடுமே என்ற கவலையில், அத்தனை ஏச்சுகளையும் திட்டுகளையும் வாங்கிக்கொண்டு வேலையைத் தொடரும் சூழ்நிலை. வேலைபோனால், வேறு வேலை தேடியெடுத்து, வீட்டில் அடுப்பெரிய, அன்றாட வாழ்க்கை ஓட, அயராது வேலை செய்த அந்தத் தைரியமும் மனத்துணிவும் எங்கிருந்து வந்தது? அத்தனையையும் எப்படியோ சமாளித்து, இப்போது உங்களது குடும்ப உறுப்பினர்களின் வெற்றிகளை பின்னே இருந்து பார்த்து சந்தோசப்படுகிறீர்கள்.

அந்தத் துணிவும், போட்டிபோட்டு எழுந்து நடக்கும் உணர்வும், இன்னும் கொஞ்சம் முயற்சித்து பயணிப்போம் என்ற சாதகமான எண்ணமும், உங்களிடமிருந்து படிப்படியாக குறைந்து செல்வது ஏன்? எப்படி அந்த மனத்துணிவை இழக்க ஆரம்பித்தீர்கள்? உடம்பு கொஞ்சம் சோர்ந்து விட்டது என்பது உண்மைதான். சில வருத்தங்கள் உங்களை வாட்டுவதும் உண்மைதான். ஆனால் அந்த சின்ன வயதில், எதுவுமே சொல்லித்தராமல் ஆழ்கிணற்றுக்குள் தள்ளிவிடப்பட்ட அந்தத் தருணங்களில் உங்களுக்கு இருந்த அதே மன உணர்வும் துணிவும் இப்போதும் அப்படியே இருக்க வேண்டுமே? எப்படி அதைக் கைவிட்டீர்கள்?

நீங்கள் இன்று உங்களையே குறைத்து மதிப்பிட ஆரம்பித்து விட்டீர்கள். எனக்கு வயது போய்விட்டது - எனக்கு ஒன்றும் செய்ய இயலாது - தற்செயலாக இல்லை என்று சொன்னால் என்ன செய்வது? ஏசினால் என்ன செய்வது? கலைத்து விட்டால் என்ன செய்வது? என்று இல்லாத பொல்லாத பயமெல்லாவற்றையும் உங்களது மனதில் உருவாக்கி, உங்களுக்குள் நீங்களே கூனிக்குறுகி பயந்த சுபாவம் கொண்ட அப்பாவிகளாக, உங்கள் மனதில் ஒரு கிலேசத்தை உருவாக்கி, இனியென்ன எல்லாம் முடிந்தது என்று மனதளவில் விடைபெறத் தயாராகி விடுகிறீர்கள்.

உண்மையில் இது மிகப்பெரிய தவறு என்பதை உளவியல் நிபுணர்கள் எத்தனை தடவை சொல்லியும் கூட, உங்களையறியாமல் நீங்கள் படிப்படியாக உங்கள் மனதிற்குள் அந்தப் பய உணர்வை நினைவு படுத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

இதிலிருந்து நீங்கள் அவசியம் வெளியே வரவேண்டும். வாழ்க்கையில் எத்தனை எத்தனை பிரச்சனைகளையெல்லாம் வெட்டியாடி களம் கண்டவர்கள் நீங்கள் தெரியுமா?

இப்போது இந்த முதல்தர மேற்குலக நாடுகளில் வாழும் இளையவர்கள், எந்தவித சவாலையுமே சந்திக்காதவர்கள். அரசாங்க உதவிகள், கல்வி வசதி, பல்கலைக் - கழக வாய்ப்புகள், சுகாதாரம், மருத்துவ உதவிகள், இலவச மருந்துகள், வீடு, தொழில், காப்புறுதி, திருமணம், விவாகரத்து, மறுமணம், குழந்தை பெறுவது, தொழில் காப்புறுதி, வேலை போனால் உதவித்தொகை, ஓய்வூதியம், முதியோர் பராமரிப்பு என்று எத்தனையோ வசதிகள். PSW, childcare, dental, optical, family doctor, specialist, Xray, Ultrasound, free prescriptions, free medication, ambulance, wheel transit, public service, seniors pension, WSIB, accident benefits, special grants, allowances, subsidies, legal aid, counselling, autistic care, mental healthcare, longterm care, palliative care இப்படி பெரிய பட்டியலே வாசிக்கலாம்.

அங்கே எமக்கு என்ன இருந்தது? இதையெல்லாம் பெறுகின்ற இங்கு வாழும் சமுதாயத்திற்கு, நாம் கடந்து வந்த கரடு முரடான பாதை பற்றித் தெரியாது, அதாவது தெரிந்தாலும், அதன் அனுபவரீதியான துன்பத்தை உய்த்துணரும் வாய்ப்பு இல்லை.



அ. முத்துலிங்கம்

# முந்திரிப் பருப்பு

ஒவ்வொரு தடவையும் அமெரிக்கா போகும்போது ஏதாவது ஒரு சம்பவம் நிகழும். இம்முறை நிகழ்ந்தது கொஞ்சம் அபூர்வமானது. உடனேயே குறித்து வைத்துக் கொண்டேன். இன்னும் இந்தச் சிக்கலுக்கு நான் விடைகாணவில்லை.

ஒரு நாளைக்கு பல மின்னஞ்சல்கள் வருகின்றன. யாரோ யாரோவுக்கு எழுதியவை. அவற்றின் நகல்கள் எல்லாம் சுற்றறிக்கைபோல எனக்கும் வரும். அவற்றை ஒவ்வொன்றாக நீக்குவதுதான் காலையில் என் முதல் வேலை. இந்தக் கடிதமும் அப்படியே பேர் அறிமுக மில்லாத அறிக்கை போல காணப்பட்டது. அதை அழிக்கப்போனபோது அதிலிருந்த ஒரு வசனம் நான் எழுதிய வசனம் போலவே பட்டது. உடனே அழிப்பதை நிறுத்தினேன்.

பல வருடங்களுக்கு முன்னர் நான் மொன்ரானா மாநிலத்தில் ஒரு மாட்டுப் பண்ணைக்கு போயிருந்தேன். பிரம்மாண்டமான மாட்டுப்பண்ணை. ஆயிரக்கணகான மாடுகளை பராமரிக்கும் இடம். நாங்கள் போன அன்று மாடுகளுக்கு அடையாளம் இடும் வேலை நடந்துகொண்டிருந்தது. எங்கள் ஊரில் நடப்பதுதான். பழுக்கக்காய்ச்சிய சூட்டுக்கோலால் மாட்டின் தோலில் அடையாளம் இடுவது. ஒரேயொரு வித்தியாசம், இங்கே சூட்டுக்கோல் மின்சாரத்தால் சூடாக்கப்பட்டு தகதகவென்று மின்னியது. மாடுகள் நிரையாக ஒன்றை ஒன்று இடித்துக் கொண்டு முன்னேறின. தன்னுடைய இடத்தை வேறு மாடு அபகரித்துவிடுமோ என்பதுபோல மாடுகள் முண்டியடித்தது வேடிக்கையாக இருந்தது. சூட்டுக்கோலால் சூடு வாங்க இத்தனை அவசரம் காட்டின. சூட்டுக்கோல்காரர் சூடு வைத்ததும் மாடுகள் தடுப்புக்கு வெளியே வந்து அதனதன் கன்றை நோக்கி ஓடத்தொடங்கின.

ஆயிரம் கன்றுகள் 'ம்மா ம்மா' என்று சத்தமிட்டபடி காத்து நின்றன. தாய் கிட்டநெருங்கியதும் கன்று எப்படியோ தெரிந்து தாயை நோக்கி ஓடி வந்தது. அங்கே குழுமியிருந்த அத்தனை சனங்களும் இதைப் பார்ப்பதற்காகவே வந்திருந்தார்கள். அந்தக் கன்றுக்கு அத்தனை மாடுகளிலும் அதுதான் தாய் என்பது எப்படித் தெரியும்? அடிக்கடி அதை நினைந்து நான் வியந்ததுண்டு.

எப்படி கன்று தாயை நோக்கி ஓடி வருமோ அப்படி அந்த வசனம் என்னை நோக்கி வந்தது. எப்பவோ ஒரு காலத்தில் எழுதியிருந்தாலும் அது என் எழுத்து. நான் எங்கே எழுதினேன் என்பது ஞாபகம் இல்லை. ஆனால் அந்த வசன அமைப்பு என்னுடையதுதான். அது இப்படிப் போனது.

"அந்த விழாவில் பெண்கள் பங்களிப்பு அதிகமாக இருந்தது. பரிசுக்காக தேர்ந்தெடுத்த ஐந்து பேர்களில் நால்வர் பெண்கள். கணவர் எழுத்தாளராயிருந்தால் அவர் மனைவியை அழைத்து வந்தார். மனைவி எழுத்தாளராயிருந்தால் கணவர் வரவில்லை. ஒருத்தி உரத்த குரலில் 'எங்கே உன் கணவர்?' என்று கேட்டார். அதற்கு பதில் 'அவர் வீட்டை துடைக்கிறார்' என்று வந்தது. இரு பெண்களும் கலீரென்று பழி தீர்ப்பதுபோல சிரித்துக் கொண்டார்கள். 'தேர்ந்தெடுத்த ஐந்து புத்தகங்களையும் நீங்கள் படித்துவிட்டீர்களா?' என்று அதே பெண் வினவினார். அதற்கு மற்றவர் சொன்னார் 'ஒன்றைப் படித்தேன். அடுத்ததைப் படிக்க ஊசி போடும்போது பல்லைக் கடிப்பதுபோல கடிக்க வேண்டியிருந்தது.'

இப்பொழுது ஞாபகம் வந்தது. விருதுகள் அளிக்கும் விழா ஒன்றுக்கு நான் போய் திரும்பிய பின்னர் 20 வருடங்களுக்கு முன்னர் எழுதியது. இன்னும் பல இடங்களில் என் வசனங்கள் தோன்றியபடியே இருந்தன. என் வசனம் ஒன்றில் பாதியை எழுதினால்கூட என்னால் கண்டுபிடித்துவிட முடியும். அடுத்து இன்னொரு பத்தி வந்தது. அதுவும் நான் எழுதியதுதான்.

'நான் வீட்டுக்கு எழுதும் கடிதங்களை படித்துக் கிழித்துவிட்டு திரும்பவும் எழுதச் சொல்வார். அவரே என் கடிதத்தை உறையிலிட்டு தபால்தலை ஒட்டி அனுப்புவார். நான் கண்டது காலை, மதியம், மாலை, இரவு, அவ்வளவுதான். என்னை வெளியே கூட்டிப் போனது கிடையாது. எனக்கு பிரெஞ்சு மொழியும் தெரியாது. நான் ஓர் அடிமை வாழ்க்கை வாழ்ந்தேன். ஆனால் என் அப்பா நான் பெரிய படிப்பு படிக்கிறேன் என்ற ஆனந்தத்தில் மிதந்தார். என்னுடைய சின்னம்மா கடிதத்தில் என்ன எழுதுவாரோ தெரியாது, ஆனால் அப்பா எனக்கு எழுதும் கடிதங்களில் 'நல்லாகப் படி. அடுத்த சோதனையிலும் முதல் ஆளாக நீ வரவேண்டும்' என்று எழுதியிருப்பார்.'

என்னுடைய எழுத்தை அப்படியே நகல் எடுத்து போட்டிருக்கிறார்கள். இதுவென்ன என்று புரியவில்லை. இதனால் யாருக்கு என்ன லாபம்? ஆரம்பத்தில் இருந்து படிக்க ஆரம்பித்தேன். ஓரளவு புரிய ஆரம்பித்தது. என்னுடைய புத்தகம் ஒன்று எனக்குத் தெரியாமலே வெளியாகியிருந்தது. இந்தப் புத்தகத்தை பாராட்டி ஒருவர் எழுதியிருந்த கட்டுரைதான் நான் படித்தது. அவர் தான் ரசித்த இடங்களை ஒவ்வொன்றாக சொல்லி சிலாகித்திருந்தார். அவருக்கு பிடித்துக்கொண்ட வசனங்களை அப்படியே காட்டியுமிருந்தார். ஒவ்வொரு நகைச்சுவை வசனத்தையும் தன் நகைச்சுவைபோல சுட்டிக்காட்டினார். பின்னர் அதைப்பற்றிய விளக்கங்கள் கொடுத்தார். இறுதியில் ஒன்று வெளிச்சமானது. யாரோ என்னுடைய புத்தகங்களைப் படித்து அதில் உள்ள நல்ல சம்பவங்களையும், வனங்களையும் திரட்டி ஒரு புத்தகமாகப் போட்டிருந்தார். புத்தகம் எத்தனை பக்கங்கள் என்ற விபரம் இருந்தது. என்ன விலை என்றும் போட்டிருந்தது. பதிப்பகம் மாத்திரம் என்னவென்று தெரியவில்லை.

பாயாசத்தில் காணப்படும் முந்திரிப்பருப்புகளை மாத்திரம் சேகரித்து ஓர் இனிப்பு பணியாரம் செய்வது போலத்தான். இதுவும் நல்ல உத்திதான். யாரோ பாவம் களவாடிய இந்தப் புத்தகத்தை வெளியிட்டு பணம் சம்பாதிக்கப் பார்க்கிறார்.

எதுவும் செய்யட்டும். பிரச்சனை இல்லை. புத்தகத்தின் பெயர் என்ன, அது எங்கே கிடைக்கும் என்ற விபரத்தை சொன்னால் நானும் வாங்கிப் படித்துப் பயன்பெறலாம்.

# ‘FIFA’ உலகக் கிண்ண போட்டி - 2022
# வென்றது ஆர்ஜன்ரினா! அசத்தியது பிரான்ஸ்!





கட்டாரில் நடைபெற்ற 2022 உலகக் கிண்ண போட்டியில் ஆர்ஜன்ரினா அணி 36 ஆண்டுகளின் பின்னர், மூன்றாவது தடவையாக வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. இறுதிவரை அர்ப்பணத்தோடு விறுவிறுப்பாக விளையாடிய பிரான்ஸ் அணி பார்வையாளர்களை முழுமையாகக் கவர்ந்தது.

பரபரப்பாகவும் வெற்றிக்கிண்ணத்தை யார் பெறுவார்கள் என்றும் நிச்சயிக்க முடியாத நிலையிலும் இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணியினரும் வெற்றியைப் பெறுவதென்ற லட்சியத்துடன் போட்டியிட்டனர்.

தனது இறுதிக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் உலகக் கிண்ணத்தை வென்றுவிட வேண்டுமென்ற நோக்கில் ஆர்ஜன்ரினாவின் மெஸ்ஸி மிகச் சாதுரியமாக விளையாடினார். அதே சமயம் வேகம், விவேகம், சிறந்த பந்துப் பரிமாற்றம் ஆகியவை கலந்த வியூகங்களுடன் பிரான்ஸ் அணியினர் விளையாடினர்.

மொத்தம் 32 நாடுகள் பங்குபற்றிய இப்போட்டியின் இறுதி, கடந்த மாதம் 18ம் திகதி இடம்பெற்றது. நான்காவது தடவையாக உலகக் கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டியிலும் ஏழாவது தடவையாக அரைஇறுதிப் போட்டியிலும் பிரான்ஸ் அணி விளையாடியது. அறுபது வருடங்களின் பின்னர் சம்பியன் பட்டத்தை தக்க வைக்கும் நோக்கில் பிரான்ஸ் அணி இம்முறை களத்தில் இறங்கியது.

1958, 1982, 1986 ஆண்டுகளில் தோல்வியடைந்த பிரான்ஸ் அணி கடைசியாக விளையாடிய 1998, 2006, 2018 அணிகளில் வெற்றி பெற்றதுடன் 1998லும் 2018லும் சம்பியனாகியது. கடந்த மாதம் நடைபெற்ற போட்டியில் ஆர்ஜன்ரினா அணி கைப்பற்றிய மூன்றாவது வெற்றிக் கிண்ணம் இதுவாகும்.

ஆட்டத்தின் முதல் பாதியில் ஆர்ஜன்ரினா அணி ஆதிக்கம் செலுத்தியது. 23வது நிமிடத்தில் மெஸ்ஸி முதல் கோல் அடித்தார். 36வது நிமிடத்தில் ஏஞ்சல் டி மரியா 2வது கோலை அடித்து முதல் பாதி ஆட்டம் முடியும்போது ஆர்ஜன்ரினாவை முன்னணியில் நிறுத்தினார். அவ்வேளை பிரான்ஸ் அணி கோல் எதுவும் போட்டிருக்கவில்லை. ஆர்ஜன்ரினா அணி இலகுவாக வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பில் இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தின்போது பிரான்ஸ் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. 80வது நிமிடத்தில் பிரான்சுக்கான முதலாவது கோலை அடித்த நட்சத்திர வீரர் எம்பாப்பே 81வது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்து பார்வையாளர்களை மிரள வைத்தார்.

போட்டி நிறைவடையும்போது இரு அணிகளும் 2-2 என்ற சமநிலையில் இருந்ததால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. 108வது நிமிடத்தில் மெஸ்ஸி தனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை மூன்றாவது கோலாக்கினார். ஆர்ஜன்ரினா வீரர் ஒருவர் அடித்த பந்து பிரான்சின் கோல் காப்பாளரின் கைகளில் பட்டு திரும்பி வர அந்தப் பந்தை திருப்பியடித்து கோலாக்கினார் மெஸ்ஸி. 118வது நிமிடத்தில் பிரான்சின் எம்பாப்பே பெனால்டி சூட் மூலம் மூன்றாவது கோலைப் போட்டு ஆர்ஜன்ரினாவை அதிர வைத்தார். போட்டி முடியும்போது 3-3 என்ற கோல் கணக்கில் இருந்ததால், சமநிலை தவிர்ப்பு உதை மூலமாக வெற்றி தோல்வியைக் கணிக்க முடிவு செய்யப்பட்டது. இதில் ஆர்ஜன்ரினா 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டியில் தங்கக் காலணி விருது பிரான்சின் எம்பாப்பேக்கு வழங்கப்பட்டது. தங்கக் கையுறை (கிளவுஸ்) விருதை ஆர்ஜன்ரினாவின் கோல் காப்பாளர் டி. மார்டினஸ் பெற்றார். தங்கப் பந்து விருதை ஆர்ஜன்ரினா மெஸ்ஸி பெற்று தமது வாழ்நாள் கனவை நிறைவேற்றிக் கொண்டார். சிறந்த இளம் வீரருக்கான விருது 21 வயதான ஆர்ஜன்ரினா அணியின் என்சோ பெர்னான்டசுக்குக் கிடைத்தது.

இந்தப் போட்டியில் பிரான்ஸ் அணி தோல்வியை தழுவியதாயினும் எம்பாப்பேயின் ஆட்டம் பலரது பாராட்டையும் பெற்றது. பார்வையாளர்களை கதிரையின் நுனியில் அமர்ந்திருக்க வைத்த வீரர்களாக மெஸ்ஸியும் எம்பாப்பேயும் போட்டி முழுவதும் காட்சி கொடுத்தனர். மூன்று கோல்களை இப்போட்டியில் அடித்ததன் மூலம் ஹட்றிக் சாதனையை எம்பாப்பே நிலைநாட்டினார்.

இப்போட்டி நடைபெறுவதற்கு முதல்நாள் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மொறாக்கோவை வீழ்த்தி குரோசியா வெற்றி பெற்றது. போட்டி ஆரம்பமாகிய ஏழாவது நிமிடமே குரோசிய வீரர் ஜோஸ்கோ முதலாவது கோல் அடித்தார். அடுத்த இரண்டாவது நிமிடத்தில் மொறாக்கோ வீரர் அக்ரப் தாரி மறுகோல் அடித்தார். 42வது நிமிடத்தில் குரோசிய வீரர்

(தொடர்ச்சி 30ம் வருக)

# இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா
# Association of Past Business Owners of Sri Lanka
## பத்தாவது ஆண்டு 'வர்த்தக தீபம்' நிகழ்வு







கனடாவில் இயங்கும் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் பத்தாவது ஆண்டு 'வர்த்தக தீபம்' நிகழ்வு கடந்த மாதம் 26ம் திகதி ஸ்காபரோவில் சங்கத்தின் தலைவர் திரு. கேதா நடராஜா தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக மகப்பேற்று வைத்திய நிபுணர் குமார் கிருபா கலந்து கொண்டார். திருவாளர்கள் சாந்தா பஞ்சலிங்கம், விலோசன் சிவதர்மன், பத்மநாதன் ரங்கநாதன், ரமேஸ் செந்தில்நாதன், கனகநாயகம் தனநாயகம், கிருஷ்ணபிள்ளை, திருமதி கௌரி பாபு ஆகியோருக்கு அவர்களின் சாதனைகளை வியந்து விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளுடன் விருந்துபசாரமும் இடம்பெற்றது.














ப. ஸ்ரீஸ்கந்தன்

# ஞாபகம் துளிர்க்கிறதே !

21

## 200 ஆண்டுகால துயர் வரலாறு

இலங்கையின் மலையகப் பகுதியில் புசல்லாவ என்ற இடத்தில் அண்மையில் சிறுவன் ஒருவனை சரியான நேரத்துக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடியாமற் போனதால் அவன் இறந்துபோன செய்தியொன்றை பத்திரிகையில் படித்தேன். இதனைப் படித்தபோது 50 வருடங்களுக்கு முன்னர் நான் கண்ட காட்சியொன்று நினைவில் வந்து என்னை அலைக்கழித்தது.

எனது அப்பா தபால் இலாகாவில் கணக்குப் பரிசோதகராக பணி புரிந்ததால் எனது பாடசாலை விடுமுறை நாட்களில் அவர் செல்லும் இடங்களுக்கு புகையிரதத்தில் இலவச வாரன்டில் பயணிப்பதுண்டு. அப்படித்தான் ஒருமுறை நான் பதுளைக்குச் சென்று அங்குள்ள உவக்கட்டுவெல என்ற தேயிலைத் தோட்டத்தில் சின்னத் துரையாக இருந்த உறவினர் வீட்டில் தங்கியிருந்தேன்.

அந்த மலையின் உச்சிக்குச் செல்ல ஒரு மணற்பாதை இருந்தது. காலையிலும் பிற்பகலிலும் ஒரு தடவை இ.போ.ச வண்டி வந்து போகும். சிலவேளைகளில் வருவதில்லை. மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்து செல்ல பழகிக் கொண்டனர். மலையின் அடிவாரத்திலிருந்து பத்து மைல் தொலைவிலிருந்த பதுளையின் நகரப் பகுதியில் பிரமாண்டமான கடைகள், மருத்துவமனை, புகையிரத நிலையம் போன்றவை இருந்தன.

தோட்டத்தில் நான் தங்கியிருந்த ஒரு நாள் அருகிலிருந்த காளி கோயில் பக்கம் பெரும் அழுகுரல் சத்தம் கேட்டது. குப்பி விளக்கு தட்டுப்பட்டு உடம்பெல்லாம் கருகிய ஒரு சிறுமியை கோயில் மண்டபத்தில் கிடத்தியிருந்தனர். வலியால் அந்தச் சிறுமி துடித்துக் கொண்டிருந்தாள். பெண்கள் கதறியபடி இலை குழைகளால் இலையான்களக் கலைத்தனர். மலையின் அடிவாரத்துக்குச் சென்று வாகனம் ஒன்றை பிடித்துவர போனவர்கள் வந்து சேரவில்லை. அந்தச் சிறுமி முனகியவாறு இறந்து போனாள்.

அந்தச் சிறுமி யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் உயிர் பிழைத்திருப்பாளென்று நினைத்துக் கொண்டேன். இதுதான் மலையக மக்களின் வாழ்வு. இச்சம்பவம் நடந்து ஐம்பது வருடங்களின் பின்னரும் இவ்வாறான செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்க வேண்டியிருக்கிறது.

மலையின் உச்சியிலிருந்து பார்க்கும்போது தொழிலாளர்கள் வரிசையாக செல்லும் காட்சி அழகாக இருக்கும். எனினும் அடக்குமுறை, அட்டைக்கடி, வசதியற்ற வாழ்வு என அவர்களது துயரம் தொடர்கதை. அட்டைக்கடி என்பது நீங்கள் நினைப்பது போலல்ல. உடலைத் துளைத்து உள்ளே சென்று இரத்தத்தைக் குடிக்கும் அட்டையை இழுத்து வெளியே எடுக்க வேண்டும். அவ்வளவு கொடூரமானது.

1823 காலப்பகுதியில் முதலில் ரயில்பாதை அமைக்கவும், கோப்பிச் செய்கைக்காகவும் ஆங்கிலேயர்கள் வெளியாட்களைக் கொண்டு வந்ததாக சொல்லப்படுகிறது. கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைய தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆங்கிலேயர்களால் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர். திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் பஞ்சம் நிலவிய அக்காலகட்டத்தில், அப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் இலங்கைக்குச் சென்றனர். அப்பயணம் அவர்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. பாம்பன்மேட்டில் வைத்து மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு அவர்கள் நெஞ்சில் பச்சை அடையாளம் குத்தப்பட்டது.

பின்னர் படகுகள் மூலம் தலைமன்னார் வந்த அவர்கள் காடுகளூடாக 107 மைல் தொலைவிலுள்ள குருநாகல என்ற இடத்துக்கு கால்நடையாகவே அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயணத்தில் கொலரா, அம்மை நோய்களாலும் பசியாலும் பலர் இறந்து போயினர். குருநாகலவில் மீண்டும் மருத்துவ சோதனைகள் செய்யப்பட்டு அங்கிருந்து வெவ்வேறு தோட்டங்களுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

1948 சனத்தொகை மதிப்பீட்டின்படி ஒன்பது இலட்சம் இந்திய வம்சாவளியினர் இலங்கையில் இருந்தனர். இவர்கள் இலங்கையின் மொத்த குடிசன மதிப்பீட்டில் 12.9 வீதமாகவும், இலங்கைத் தமிழர்கள் 12.8 வீதமாகவும் இருந்தனர். 1947ல் இடம்பெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து ஏழு தமிழர்களும், மலையகத்திலிருந்து ஆறு இந்திய வம்சாவளித் தமிழர்களும் உறுப்பினர்களாகத் தெரிவாகினர். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 95 மட்டுமே.

இவ்வாறு ஆறு உறுப்பினர்கள் தெரிவானதாலும், பல தொகுதிகளில் வெற்றியை நிர்ணயிப்பவர்களாக இவர்கள் இருந்ததாலும் 1948ல் இலங்கை குடியுரிமைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையை பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது இலங்கை அரசு. இச்சட்டத்தை எதிர்த்து 1949ல் முல்லோயாவில் இடம்பெற்ற போராட்டத்தில் கோவிந்தன் என்ற தொழிலாளி பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர் 1964ல் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டதும், மூன்று லட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதும், ஐந்து லட்சம் பேர் தென்னிந்திய நீலகிரி மாவட்டத்துக்கு நாடு கடத்தப்பட்டதும், மீதமானோர் கொழும்பு கொம்பனித்தெருவில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அகதி முகாமில் அடைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டதும் வரலாறு.

இவ்வருடம் மலையகப் பகுதிகளில் 'மலையகம் - 200' என்ற நிகழ்வுகளை நடத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

முழுமனதுடன் இதில் பங்கேற்கும் நிலையில் மக்கள் இருக்கிறார்களா என்பதே கேள்வி.

# சுகன் சிவராஜாவின்
# Royal LePage Ignite & United Realty

## வருடாந்த விருதுகள் வழங்கலும் உபசாரமும்

சுகன் சிவராஜாவின் Royal LePage Ignite & United Realty நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கலும் உபசாரமும் கடந்த மாதம் 18ம் திகதி ஸ்காபரோவில் இடம்பெற்றது. ஸ்காபரோ றூஜ்பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஹரி ஆனந்தசங்கரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். Top Producer விருது திரு. வேர்ணன் பாலச்சந்திரனுக்கு வழங்கப்பட்டது.














# செல்வா வெற்றிவேல் நிர்வாகத்திலான HomeLife / Future Realty Inc., 20வது ஆண்டு விருது விழாவும் விருந்தும்



செல்வா வெற்றிவேல் நிர்வாகத்திலான **HomeLife/Future Realty** நிறுவனத்தின் 20வது ஆண்டு விருது விழாவும் விருந்தும் கடந்த மாதம் 17ம் திகதி ரொறன்ரோவில் இடம்பெற்றது. ஸ்காபரோ றூஜ்பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஹரி ஆனந்தசங்கரி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். இந்த வருடமும் Top Producer விருதை அபி அமலன் பெற்றுக் கொண்டார்.




























# ஆறுமுகநாவலர் 200வது அவதரிப்பு ஆண்டு விழா





நல்லைநகர் தந்த சிறீலசிறீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200வது அவதரிப்பு ஆண்டு விழா கடந்த மாதம் இலங்கையின் பல பாகங்களிலும் இடம்பெற்றது. அவர் பிறந்து வளர்ந்த நல்லூரில் கலை நிகழ்வுகள், உரைகளுடன் கூடிய மாநாடு நடைபெற்றது. இறுதியில் சைவசமய ஆசாரசீலப்படியான ஊர்வலம் கோவில் வீதியில் ஆரம்பமாகி நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தைச் சென்றடைந்தது. இம்மாநாட்டில் சமூகச் சான்றோர்களுக்கு நாவலர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.





# யாழ்ப்பாணம் செம்மணி முகப்பில் சிவலிங்கம் பிரதிஷ்டை









யாழ்ப்பாணம் நாவற்குழிக்கு அண்மித்த செம்மணிச் சந்தியில் சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கடந்த மாதம் கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட ஏழு அடி உயரமான சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது அமைக்கப்பட்ட வேளையில் படைத்தரப்பினரால் பல கேள்விகள் எழுப்பப்பட்டதாயினும், அதனையும் தாண்டி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார். சிவன் சிலைகளை பல இடங்களிலும் அமைப்பதன் மூலம் இந்துமத அடையாளங்களை பாதுகாக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# Markham McNicoll Urgent Care Centre
## (MMUCC)

### எங்கள் புதிய மருத்துவ சேவைகள்!

நோயாளர்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்திலிருந்தோ நேரலை வழியாக (Virtual Care) மருத்துவரிடம் சிகிச்சை பெறலாம்.

நோயாளர்கள் கணினி மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ (online booking & book by phone) மருத்துவர் பார்வையிடும் நேரத்தையும் காலத்தையும் பதிவு செய்யலாம்.

வைத்திய கலாநிதி சிந்துலா விஜயா (குடும்ப மருத்துவர்) அவர்களது பதிவு பெற்ற நோயாளர்களும் இந்த சேவைகளைப் பெறமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு

**medcentrehealth.com**

எனும் எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

**2901 Markham Road, Unit -11**
**Toronto, ON M1X 0B6**

**Phone: 416-609-3333**




# உங்களிடம் ..

## செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?

## உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!

வணிக உரிமையாளர்களும் சுயதொழில் செய்வோரும்
வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை
அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.



## அஜித் சபாரட்ணம்

**647-401-5800 | 416-439-2800**

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• *Vistation* • *Funeral & Memorial Service*
• *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death


**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7, Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S
CHOICE
We build 10,000sq. feet (minimum)
warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour
Wind resistance.
Termite Proof
Compare traditional Building
Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்ததாக
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு
கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE
EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


Just Sold!
RAVE
Another SOLD
$ 206,000
Over Asking Price
18 Brackenridge St,
Ajax, Ontario
Rossland & Salem
- Contact us for a Free Home Evaluation! (no obligation)
- For personalized Tour & Other Property Information Call Us today!
- Free home staging
Before you list Call me
You can see the Difference
Highest price in the same street
P.Raveenthiran
Real Estate Broker
416-567-2462
realtor.rave@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977 | Fax: 905.201.9229
HOMELIFE
HIGHER STANDARDS


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


Veerar Takeout & Catering
416-299-4541
647-293-6634
5790 Sheppard Ave East, #3, Scarborough, ON M1B 5J6


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
Singapore Jewellery
Finest Quality 22K Gold
Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream



வேதநாயகம் தபேந்திரன்

# பறங்கியரின் பாண்

“உது பறங்கியரின் பாண் மோனை, உனக்கு அப்பம் சுட்டுத் தாறன். பாண் தின்னக் கேளாதே. இஞ்ச கடையில் போய் பாண் வாங்கினால் பாண் தின்னியென சனங்கள் எங்களைப் பழிக்கும்”.

இது நாற்பது வருசத்துக்கு முந்திய கதை. கதையின் களம் முல்லைத்தீவில் இறுதிப் போர் நிகழ்ந்த அம்பலவன்பொக்கணை. கிராமத்தில் எங்கள் அப்பாச்சி (அப்பம்மா) ஒருவர் சொன்ன கதை.

காலம் எவ்வளவு வேகமாக எம்மை மாற்றி விட்டது. இன்று பாண், பணிஸ், பேஸ்ரி என எங்கள் வாழ்வு கோதுமைப் பண்டங்களுக்குள் முடங்கி விட்டது. போர்க்காலத்தில் பசி தீர்த்த உணவுகளில் பாண், கல்பணிஸ், பணிஸ் ஆகியவை ஞாபகத்தில் மறக்க முடியாதவை.

போர்த்துக்கேயர் கப்பலில் வந்து துறைமுகத்தில் கப்பலை நங்கூரம் இடச் செய்து விட்டு பாணை உண்டு பிளேன் ரீ குடித்தார்களாம். அப்போது எம்மவர்கள் அதனைப் பார்த்து விட்டு கல்லை உண்கிறார்கள். இரத்தத்தை குடிக்கிறார்கள். ராட்சசர்கள் வந்துள்ளனர் என்றொரு சுவையான கதையும் உண்டு.

வாத்தியார் என்றால் எம்ஜிஆர். அதுபோல யாழ்ப்பாணத்தின் பழைய தலைமுறைக்கு அம்மா என்றால் சிறிமாவோ பண்டாரநாயக்கவே. அம்மா காலத்தில் 1970ம் ஆண்டு முதல் 77 வரை மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக் - கப்பட்டது.

அப்போது இறக்குமதிகள் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டன. கோதுமை மா இறக்குமதி பெருமளவில் நிறுத்தபட்டு உள்நாட்டில் மரவள்ளி, தானியப் பயிர்ச் செய்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. அப்போது உணவுக்குத் தட்டுப்பாடு வந்த போது பேக்கரிகளுக்கு கோதுமை மா மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டது. உணவுப் பஞ்சம் வந்தது. பேக்கரிகளில் மக்கள் பாணுக்கு பல மணி நேரம் கியூவில் நின்று அவஸ்தைப்பட்டு பாண் வாங்கினார்கள்.

இன்றும் அம்மா காலத்து பாண் கியூ கதையை நினைவு கூருவார்கள். சிறிமாவின் நிதி அமைச்சர் கொண்டு வந்த மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தின் பலனை வடக்கு விவசாயிகள்தான் நன்றாக அனுபவித்தார்கள். காணி வாங்கியது. வீடு கட்டியது. ட்ராக்ரர் வாங்கியது எனச் சொத்துக்கள் பெருகின.

சிங்கள மக்களோ பாணும் பருப்பும் பிரதான உணவாக வாழ்ந்து பழகியவர்கள். பரிதவித்துப் போனார்கள். அதன் விளைவு 1977 தேர்தலில் ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மை வழங்கி சிறிமாவைத் தோற்கடித்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகுமளவுக்கு சுதந்திரக் கட்சி பலத்த அடி வாங்கியது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் மாத்தறைச் சிங்களவர்களின் பேக்கரிகள்தான் பல திசைகளிலும் இருந்தன. யாழ்ப்பாணத்தவர்களின் உடைமையாக இருந்த பேக்கரிகளிலும் மாத்தறைச் சிங்களத் தொழிலாளிகளே பாண் போட்டனர். லீலா பேக்கரி, சிற்றி பேக்கரி என அவர்களது பேக்கரிகளின் பெயர்களின் நீளம் அதிகம்.

1983 யூலை 23 கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து தென்பகுதியில் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு வன்முறைகள் பெருகின. அப்போது யாழ்ப்பாணம் உட்பட வடக்கு கிழக்கில் இருந்த சிங்கள மக்கள் பாதுகாப்புக் கோரி இராணுவ முகாம்களுக்குச் சென்று ட்ரக்குகளில் தமது ஊர்களுக்குத் திரும்பினார்கள்.

யாழ்ப்பாணத்தில் பாண் பிரியர்களுக்குப் பேரிடி விழுந்தது. பாண் போட யாருக்குமே தெரியாதே. மாத்தறை சிங்கள மக்களில் மட்டும் தங்கி இருந்தவர்கள் தாமும் பாண் போடுவோமெனப் புறப்பட்டனர். ஒரு நாள் மா எரிந்து பாண் பெயரில் கரிக்கட்டை வரும். மறுநாள் மா அவியாத பச்சைப் பாண் வரும். இன்னொரு நாள் கட்டையாக வற்றி றொட்டி போல ஒன்று வரும். ஒரு நாள் ஈஸ்ட் அதிகம் கொட்டி பாண் வரும். அதனை உண்டு வயிற்றாலடி வந்து பேக்கரி நடத்தியவர்களுடன் சண்டைப்பட்டதும் நிகழ்ந்தது.

தோமஸ் அல்வா எடிசன் மின்சார பல்பைக் கண்டுபிடிக்க அறுநூறு முறை முயன்ற கதை போலத்தான், பாண் போடும் படலமும் தொடங்கியது. இரண்டு மாதங்களுக்குள் பாண் சரியாகப் போடக் கற்றுக் கொண்டார்கள். வலு திறமாக மாத்தறைச் சிங்களவருக்கும் நுட்பங்கள் சொல்லிக் கொடுக்கக் கூடியளவுக்குத் திறமாகப் பாண் உட்பட சகல வகைகளையும் போடத் தொடங்கினார்கள். அக்காலத்தில் ஸ்கைப், பேஸ்புக், வைபர், வற்ஸ்அப் இருந்திருந்தால் இப்படிப் போராடியிருக்க மாட்டார்களென நீங்கள் நினைப்பதும் எனக்குப் புரிகிறது.

மெல்ல மெல்ல வெடித்த துப்பாக்கிகளும் குண்டுகளும் பலமாக வெடித்து போர் தீவிரம்பெற, தோட்டச் செய்கை, வயல் செய்கைகள் குறைவடையத் தொடங்கியது. நகரப் பிரதேசத்தில் மட்டும் பெருமளவில் இருந்த பாண் உண்ணும் பழக்கம் கிராமங்களுக்கும் பரவியது. போர் காரணமாக இடப் - பெயர்வுகள் வரும்போதெல்லாம் அவசரகால உணவாக எங்கள் பாண்தான் கைகொடுத்தது. நிவாரணம் பெற கியூவில் நின்றது போல பாண் வாங்கவும் கியூவில் நின்றோம். 1987 ஒக்ரோபரில் இந்தியப் படைகளுடனான போர் தொடங்கியது. இடப்பெயர்வு முடிந்து நாம் எமது சுண்டுக்குளி பழைய பூங்கா வீதி வீட்டில் இருக்க முடிந்தது. அப்போது பெரும் உணவுத் தட்டுப்பாடு. பாண் தான் கைகொடுக்கும் உணவு.


இந்தியப் படைகளின் ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை. சின்னக்கடைக்கு முன்பாக பிரதான வீதியில் இருந்து பேதுறுப்பிள்ளை பேக்கரியில் பாண் கொடுத்தார்கள். அதிகாலை 5 மணிக்கே மாரி கால இருளில் ஊரடங்கு நேரத்தில் உள் பாதைகளால் சென்று சின்னக்கடைக்குக் கிட்டப் பதுங்கிக் கூட்டமாக நிற்போம். ஊரடங்கு முடியும் நேரம் ஓடிச் சென்று பெரும் கியூவில் நின்றோம். பிரிகேடியர் மஞ்ஜித்சிங் என்ற பெயருள்ள சீக்கிய இன அதிகாரி தனது படை வீரர்கள் சகிதம் காவலில் நிற்பார். நாங்கள் கியூவில் நின்று பாண் வாங்குவோம்.

பேதுறுப்பிள்ளை பேக்கரியில் றோஸ் பாண் என புதுவிதமான பாண் போடுவார்கள். அதனை நான் விரும்பி..

(தொடர்ச்சி 30ம் வருக)

# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் இயல் விருதுகள் - 2022

**வழக்கமாக வருடாவருடம் வழங்கப்படும் கனடா தமிழ் இலக்கியத் தோட்ட இயல்விருது, கோவிட் நோய்த்தொற்று காரணமாக 2020ம் வருடம் வழங்கப்படவில்லை. ஆகவே 2022ல், இருவருக்கு இயல் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவை 2023 யூன் மாதம் றொறன்ரோவில் இடம்பெறும் நிகழ்வில் வழங்கப்படும். இயல் விருது பெறும் இருவரின் விபரம் வருமாறு:**



## பாவண்ணன் (பலராமன் பாஸ்கரன்)

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022ம் ஆண்டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனை-யாளர் இயல் விருதை, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் பாவண்ணன் அவர்களுக்கு வழங்குகிறது.

பாவண்ணன் 1980 களில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களின் தலைமுறையை சேர்ந்தவர். 'தீபம்' என்னும் இதழில் வெளிவந்த முதல் சிறுகதையை தொடர்ந்து சிற்றிதழ்களிலும், பெரிய இதழ்களிலும் இவர் இன்றுவரை தொடர்ந்து எழுதுகிறார்.

தமிழ் சிறுகதைகளையும், தமிழில் வெளிவந்த பிறமொழிச் சிறுகதைகளையும் முன்வைத்து திண்ணை இணைய இதழில் 'எனக்குப் பிடித்த கதைகள்' என்னும் தலைப்பில் இவர் அந்தக் கதைகளில் காணப்பட்ட அழகியலையும் வாழ்வியலையும் இணைத்து புரிந்துகொள்ளும் விதமாக எழுதிய நூறு விமர்சனக் கட்டுரைகள் மிகப்பெரிய வாசக கவனத்தை பெற்றன.

ஐம்பது தமிழ்க் கவிஞர்களின் படைப்புகளை முன்வைத்து 'உயிரோசை' இணையத்தளத்தில் 'மனம் வரைந்த ஓவியம்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை. ரசனையை அடிப்படையாகக் கொண்டு இவர் எழுதிய பல இலக்கியக் கட்டுரைகள் இவரை தமிழ் அழகியல் விமர்சகர்களின் முன் வரிசையில் வைக்கத் தகுதியாக்கின.

பாவண்ணன், வளவனூர் என்னும் சிற்றூரில் அக்டோபர் 20, 1958 அன்று பிறந்தவர். பள்ளிக் கல்வியை வளவனூரிலும் புகுமுக வகுப்பை விழுப்புரம் அரசுக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரியிலும் படித்துத் தேறினார். கோட்டப் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

இவருடைய கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதைத் தொகுதிகள் 21ம், நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரைத் தொகுப்புகள் 34ம், சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் (எல்லாமாக 99 நூல்கள்) இதுவரை வெளியாகியுள்ளன.



## லெட்சுமணன் முருகபூபதி

தமிழ் இலக்கியத் தோட்டம், 2022ம் ஆண்டுக்கான வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் விருதை, கடந்த 50 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிவரும் இலங்கையில் பிறந்த படைப்பிலக்கிய - வாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு வழங்குகிறது.

1972ல் எழுத்தாளராக அறிமுகமான இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்தது. வீரகேசரி பத்திரிகை ஆசிரிய பீடத்தில் இவர் பணியாற்றியபோது சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் _ மாணவர் விழாவில் கலந்து கொண்டார்.

1987ல் ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த இவர், தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, பேட்டி, பயண இலக்கியம் என எழுதி வெளியிட்டு வருகிறார். ஆஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைத்துவரும் இவர், 2011ல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாளராக செயல்பட்டார்.

ஆஸ்திரேலியாவில் 1988ம் ஆண்டு முதல் இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், 2004ம் ஆண்டு முதல் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் ஆகியனவற்றின் ஆரம்ப உறுப்பினருமா - வார். இலங்கையில் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் 13 யூலை 1951ல் பிறந்த முருகபூபதி, விவேகானந்த வித்தியாலயத்தில் (தற்போது விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) தமது ஆரம்ப கல்வியை தொடங்கி பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும், (தற்போது கனகரத்தினம் மத்திய கல்லூரி) நீர்கொழும்பு அல்கிலால் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.

இவருடைய வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ரஸஞானி என்ற ஆவணப்படத்தை 2017ல் மெல்பேர்ன் எழுத்தாளர் எஸ். கிருஸ்ண - மூர்த்தியும், வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டனர். இவருடைய சிறுகதை தொகுதிகள் ஏழும், புதின - சிறுவர் - பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரை தொகுதிகள் பதினாறும் வெளிவந்துள்ளன.

இவர் பெற்ற இலக்கிய விருதுகள்: சுமையின் பங்காளிகள் _ 1975ம் ஆண்டு சிறந்த சிறுகதை தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது. பறவைகள் - 2002ம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது. அக்கினிக்குஞ்சு இணைய இதழ் 2018ல் வழங்கிய வாழ்நாள் (29ம் பக்கம் வருக)



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 57

## உண்மையாக உழைக்கும் அலுவலர்

தம்மை வேலைக்கு அமர்த்தியுள்ள அரசாங்கத்துக்கு உண்மையாக உழைப்பவர்களைக் காண்பது அரிது. என்னை யார் என்ன செய்துவிட முடியும் என்னும் கர்வத்தோடு வேலை செய்பவர்கள் பலர். பார்க்கவேண்டிய கோப்புகள் பல இருக்கையில் அவற்றை ஒருபுறம் தள்ளிவிட்டு அன்றைய நாளேடுகளைப் படிப்பவர்கள் குட்டித்தூக்கம் போடுபவர்கள் பலர். இத்தகையோர் முந்தைய காலங்களிலும் இருந்துள்ளார்கள்.

எனினும் அரசுக்கு உண்மையாக உழைக்கும் அலுவலர்களின் இயல்பு பற்றி எடுத்துரைக்கின்றது கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் சங்கப்புலவர் ஆக்கிய பட்டினப்பாலை. காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டின் புகழ்பெற்ற துறைமுகம். கடல் கடந்த நாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் வந்திறங்கும் பொருள்களும் உள்நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு எற்றுமதி செய்யப்படும் பொருள்களும் துறைமுகத்தில் வந்து குவிகின்றன. கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்குத் தீர்வை விதிப்பதும் அவற்றுக்குச் சோழ அரசின் புலி முத்திரை பொறிப்பதும் வரியாக வசூலித்த பொருள்களை அரசனின் திறைசேரிக்கு அனுப்பும்வரை பாதுகாப்பதும் அரசபணியாளர்களின் கடமை. தாழம்பூ மணம் வீசும் கடற்கரை வீதியில் அரசுக்குச் சொந்தமான பொருள்களைக் காத்துநிற்கும் அரசபணியாளர்களின் கடமையுணர்ச்சியைப் போற்றிப் பாடுகின்றார் இந்தச் சங்கப்புலவர்

மாஅ காவிரி மணம் கூட்டும் தூஉ எக்கர்த் துயில் மடிந்து
வால் இணர் மடல் தாழை வேலாழி வியன் தெருவில்
நல் இறைவன் பொருள் காக்கும் தொல் இசைத் தொழில் மாக்கள்
காய் சினத்த கதிர்ச் செல்வன் தேர் பூண்ட மாஅபோல
வைகல் தொறும் அசைவு இன்றி உல்கு செயக் குறை படாது

- பட்டினப்பாலை 116-125

அகண்ட காவிரி ஆற்றின் மணம் வீசும்
வெண்மணலில் உறக்கம் இன்றி
வெள்ளைப்பூங்கொத்தும் மடலும் உள்ள தாழை சூழ்ந்த
அகன்ற கடற்கரைத் தெருவில்,
மன்னனின் பொருள் காக்கும், பழம்பெரும் தொழில் புரிவோர்,
கொதிக்கும் கதிர்களையுடைய சூரியனின்
தேரில் கட்டப்பட்ட குதிரைகள் போல்,
நாள்தோறும், ஓயாமல் உழைத்துக்
குறைவின்றித் திறை சேர்ப்பர்.

பூம்புகார் துறைமுகத்தில் திருமாவளவன் கரிகாற்பெருவளத்தானின் அரச பணியாளர்கள் ஓய்வு உறக்கம் இல்லாது கடமையே கண்ணாக சுங்கவரி அறவிடும் நேர்த்தி பற்றி வியந்துரைக்கின்றது கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் இப்பாடல்.

## Relentless custom officers

It is rare to find people who truly work for the government that employs them. There are those who ignore their responsibility knowing that no one will question them. There are others who read the newspapers or take a nap ignoring the fact that there are so many files to be attended. Such people have existed in earlier times as well.  Pattinapalai composed by the Sangam poet Kadiyalur Rudhirangkannana, speaks of the nature of the officers who work sincerely to the state. Puumpukar was a famous port of Chola country during the time of king ThirumavaLavan also known as Karikalperuvalathan. The ships carrying goods from overseas countries and those to be exported arrive at the port.

It is the duty of the king's men to impose duties on goods to be exported by ships and stamp them with the tiger emblem of the Chola state. It is also their responsibility to protect the goods collected as taxes until they are sent to the king's treasury. These officers are guarding government-owned goods on the beach road that smells the flowers of Pandanus. This sangam poet sings in praise of their sense of duty.

Avoiding sleep on the white sand that smells vast river Kaveri,
On the wide beach street surrounded by
white clusters of Pandanus flowers,
these ancient professionals who guard our king's goods
work tirelessly every day
like the horses tied to the chariot of the sun with its harsh rays
to collect taxes without faults

- Pattinappalai 116-125

This song by Kadiyalur Rudhirangkannanar extols the work habits of the public servants of king Thirumavalavan Karikalperuvalathan who collect customs duty diligently without rest and sleep at the poompuhar port.

# கனடா தமிழ் இலக்கிய...

(28ம் பக்கத் தொடர்ச்சி )

இலக்கிய சாதனையாளர் விருது. இதர விருதுகள்: 2002ம் ஆண்டு ஆஸ்திரேலிய தினத்தின்போது விக்டோரியா மாநில டெறபின் மாநகர சபை வழங்கிய சிறந்த பிரஜைக்கான விருது. 2011ம் ஆண்டு விக்டோரியா மாநில பல்தேசிய கலாசார ஆணையத்தின் விருது. 2022  Aust Tamil TV - (Tamil Linguistics Award)  விருது.

# ‘FIFA’ உலகக் கிண்ண போட்டி

(15ம் பக்கத் தொடர்ச்சி )

மிஸ்லார் ஓர்சிக் இரண்டாவது கோலை அடித்ததன் ஊடாக குரோசியா வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற பின்னர் பேசிய ஆர்ஜன்ரினா வீரர் மெஸ்ஸி, இப்போதைக்கு தாம் ஓய்வு பெறப்போவதில்லையென்றும் தொடர்ந்து சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடப் போவதாகவும் அறிவித்துள்ளார். ஆனால் இறுதிப் போட்டிக்கு முன்னர் “எனது கடைசி ஆட்டத்தை இதில் விளையாடி உலகக் கிண்ண பயணத்தை முடித்துக் கொள்வேன்” என்று தெரிவித்திருந்தார். “அடுத்த உதை - பந்தாட்டப் போட்டிக்கு நிறைய ஆண்டுகள் உள்ளன. அதில் விளையாடுவேன் என்று நான் நினைக்கவில்லை. அதனால் இந்தப் போட்டியில் எனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி முடிக்க நினைக்கிறேன்” என்று முன்னர் கூறிய மெஸ்ஸி பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி நிகழ்வில் கறுப்பு நிற அங்கி ஒன்றை மெஸ்ஸிக்கு கட்டார் மன்னர் அணிவித்தமை உலக அளவில் பேசு பொருளாகவுள்ளது. இந்த ஆடையை அணிந்தவாறே உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொண்ட மெஸ்ஸி உணர்ச்சிவசப்பட்ட - வராக அதனை முத்தமிட்டவாறு சக வீரர்களுடன் இணைந்து நடனமாடி மகிழ்ந்தார்.

**“உதைபந்தாட்டம் பூகோளம் சார்ந்த ஒரு விளையாட்டு. மெஸ்ஸி அதன் பூகோளத் தூதுவர்” என்று அல்ஜசீரா புகழாராம் சூட்டியுள்ளது.**

**- அதிரன்**

# பறங்கியரின் பாண்...

(27ம் பக்கத் தொடர்ச்சி )

அடிக்கடி வாங்கிச் சாப்பிட்டது பசுமை நினைவுகளாக உள்ளது. வறுமை காரணமாகப் பழைய பாணை வாங்கி வந்து வீட்டில் நீத்துப் பெட்டியில் அவித்து பிள்ளைகளுக்குக் கொடுத்துப் பசியாறிய குடும்பங்களும் இருந்தன. பழைய பாணை வாங்கி வந்து தேங்காய்ப் பூ கலந்த சோற்றுக் கஞ்சியில் ஊறவைத்து கிடாய் ஆடு வளர்ப்போர் ஆட்டுக்கு உணவாகக் கொடுப்பார்கள். கிடாய் திமிறிக் கொண்டு உசாராக வளரும்.

1994 ஓகஸ்டில் சந்திரிகா பிரதமராக வந்து ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட தொடர் ஆட்சிக்கு முடிவுரை எழுதத் தொடங்கினார். அப்போது 5 ரூபாவாக இருந்த பாணின் விலையை 3 ரூபாவுக்குக் குறைத்தார். சிங்கள மக்களின் வாக்குவங்கியைக் கவர்ந்து நவம்பரில் ஜனாதிபதியாக வந்தார். 1996ல் பாணின் விலை மெல்ல ஏறி 8 ரூபாவாகியது. அப்போது எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எம். பிக்கள் நாடாளு - மன்றுக்குள் பாணுடன் சென்று அதன் மேல் மெழுகுதிரி ஏற்றி - அதாவது கேக்கின் விலைபோல பாணின் விலை கூடி விட்டதென நையாண்டி செய்து சந்திரிகாவின் ஜனாதிபதி பதவியின் இரண்டாம் வருட நிறைவைக் கொண்டாடினார்கள்.

1996 மே மாதம் நாங்கள் பெரும் இடப்பெயர்வு முடிந்து யாழ் மண்ணுக்குள் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் மீளக்குடியேறினோம். அப்போதும் உணவுக்குப் பெரும் தட்டுப்பாடு. சாப்பாட்டுத் தேவையைப் பாண் பெருமளவில் தீர்த்தது. யாழ் கச்சேரிக்கு முன்பாக வைஎம்சீஏ கட்டிடத்தில் பல நாள் நீண்ட கியூவில் நின்று பாண் வாங்கியதும் ஞாபகம். 1991ல் விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு கீழ் தமிழப் பிரதேசம் இருந்தபோது பாணுக்கு தூய தமிழென வெதுப்பி என்ற சொல்லை அறிமுகம் செய்தார்கள். பேக்கரிகள் வெதுப்பகங்களாகின. பணிஸ் இனிப்பு வெதுப்பி ஆகியது. கேக் குதப்பி ஆகியது. வெதுப்பகம் என்ற சொல் பாவனை இன்றளவும் தொடர்கிறது.

2006 ஓகஸ்ட் 11 இறுதி ஈழப்போர் தொடங்கிய காலத்திலும் பெரும் உணவுப் பஞ்சம் தோன்றியது. அப்போதும் பெரும் கியூவில் பேக்கரிகளுக்கு முன்பாக பாணுக்கு நின்றோம். இன்று காலை 5 மணிக்கே வீட்டு வாசல் - படிக்கு பாண் பணிஸ் உட்பட சகல வகையறாக்களும் உள்ள ஆட்டோ வருகிறது. கடையெங்கும் பேக்கரி உற்பத்திகள் தாராளம். பாணின் கதைகள் இன்னுமின்னும் உள்ளது. காலங்கள் பல சென்றும் பாண் எமது உணவுடன் தொடரத்தான் போகிறது.



# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**



Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist

WE ARE HERE TO
HELP YOU

இலவச ஆலோசனைகளுக்கு:
தீபன்
24 Hours Direct Line
(416) 831-4444
(416) 505-9804

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6


நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
Best Caters in Town
NANTHA TAKEOUT & CATERING
TAKE YOUR FAVOURITE MEAL
AT OUR RESTAURANT
Bridlewood Mall
UNITS 105 & 106 - 2900 WARDEN AVE, SCARBOROUGH, ON M1W 2S8
Middlefield & Steeles
UNIT 2 - 2002 MIDDLEFIELD RD MARKHAM, ON L3S 1Y5
Kipling & Steeles
UNITS 17 & 18 - 5010 STEELES AVE W, ETOBICOKE, ON M9V 5C6
OPENING SOON
2200 BROCK ROAD, PICKERING
2900 MAJESTIC CITY MALL 16-9 FOOD COURT
416 - NANTHA - 1
416-626-8421
nanthacatersinc@gmail.com

**NKS Draperies & Blinds**

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**



- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters



உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட

அழையுங்கள் **கேதா**

தமது சிறப்பான சேவையினால் தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

டாக்டர் **அ. சண்முகவடிவேல்**



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# காது இரைச்சல்

அலுவலகத்திலிருந்த அவருக்கு தனது வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. ஏதோ ஒன்று அவரைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை அவரின் கீழ் வேலை செய்யும் ஏனைய பணியாளர்களால் உணர முடிந்தது. வழமையாகச் சிரித்துக் கலகலப்பாக இருப்பவர் இன்று எதையோ பறி கொடுத்தவர்போல அமைதியின்றி நிலைகொள்ளாது தவித்தார்.

அவரை ஒரு நோய் திடீரெனத் துன்புறுத்த ஆரம்பித்திருக்கிறது. மற்றவர்களால் புரிந்து ஆறுதல் கொடுக்கக் கூடிய நோயல்ல. காய்ச்சலோ, வலியோ, புண்ணோ எதுவுமில்லை. அவரால் தனது பிரச்சனையை மற்றவர்களுக்குப் புரியவைக்க முடியவில்லை.

ஏதோவொரு இரைச்சல் காதில் எழுகிறது. அக்கம் பக்கத்தில் யாரும் பேசாதபோதும், ரேடியோ கரகரக்காதபோதும், வேறு எந்தவித ஓசையுமின்றி நிசப்தமாக இருந்தபோதும் காதில் சத்தம் விழுகிறது.

மருத்துவத்தில் ரினிட்டஸ் (Tinnitus) என்பார்கள். போலி ஒலி எனச் சொல்வதுமுண்டு. கரகரப்பது போலவோ, இரைவது போலவோ, ரீங்காரமிடுவது போல அல்லது வேறு ஏதோ ஓசை போலவோ கேட்கும். ஆனால் வெளியிலிருந்து வரும் ஓசையாக அல்லாமல், உள்ளிருந்து எழுவதுதான் இது. பெரும்பாலும் ஆபத்தான நோயல்ல. இருந்தபோதும் பொறுக்க முடியாத அரியண்டம்.

15 சதவிகிதமானவர்களுக்கு சிலநேரங்களில் மட்டுமே இவ்வாறு இரைச்சல் ஏற்படுவதுண்டு. மாறாக 2 வீதத்துக்கு மிகக் கடுமையான காது இரைச்சல் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் இவர்களது நாளந்தச் செயற்பாடுகள், தொழில், நித்திரை யாவுமே பாதிப்படைகிறதாகத் தெரிகிறது. இதனால் பலர் மனவிரக்திக்கு ஆளாவதும் உண்டு.

காது இரைச்சல் என்பது ஒரு குறிப்பிட்ட உறுப்பிலிருந்து எழுவதில்லை. அது ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். வெளிக்காது, நடுக்காது, உட்காது அல்லது காதுக்கு அப்பால், மூளை நரம்புகளிலிருந்தும் ஏற்படலாம். சிலருக்கு இது இயல்பானதாகவும் பாதிப்பை ஏற்படுத்தாததாகவும் இருக்கலாம். நிசப்தமான அறைக்குள் நுழையும்போது அல்லது புறச் சத்தங்கள் குறைவாக இருக்கும்போது மட்டும் அவரின் கவனத்தை ஈர்க்கக்கூடும்.

வேறு சிலருக்கு காதிற்குள் குடுமி, அல்லது அந்நியப் பொருள் காதை அடைத்திருப்பதால் புறச் சத்தங்கள் குறைவாகவே கேட்பதால் காதின் இரைச்சல் கவனத்தை ஈர்ப்பது அதிகமாகலாம்.

காதில் கிருமித் தொற்று, அதனால் நடுக் காதினுள் நீர் சேர்தல், செவிப்பறை எலும்புகளில் நோய் போன்றவையும் ஏற்படுத்தலாம். காதுக்கான நரம்புகளில் ஏற்படும் நுண்ணிய சேதங்கள் மற்றொரு காரணமாகும். பொதுவாக மூப்படையும்போது நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதால் வயதானவர்களில் அதிகமாகத் தோன்றுவதுண்டு.

கடுமையான சத்தங்களுக்கு அதிகமாக முகங்கொடுப்பது முக்கிய காரணமாக மாறிவருகிறது. என்ஜின் ஒலிகள், உச்சஸ்தாயி வாத்திய ஒலிகள், ஆகாய விமான ஒலிகள் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் போன்றவற்றை தொடர்ந்து கேட்பதாலும் இது நேர்கிறது.

ஆஸ்பிரின் போன்ற சில மருந்துகளும் காதிரைச்சலை ஏற்படுத்துவதுண்டு.

அதேபோல உட் காதில் ஏற்படுகிற மெனியர்ஸ் (Meniere's syndrome) நோயும் காரணமாகலாம். மூளைக்குள் தோன்றிய கட்டியால் இது இருக்குமா எனப் பலரும் பயப்படுகிறபோதும், மிக அரிதாகவே அவ்வாறு ஏற்படுவதுண்டு.

மருத்துவரிடம் செல்லும்போது காதில் இரைச்சலானது தொடர்ந்து இருக்கிறதா அல்லது விட்டு விட்டு வருகிறதா, தலைச்சுற்றும் சேர்ந்திருக்கிறதா, வாந்தி வருகிறதா, தலைச்சுற்றுடன் காதும் மந்தமாக இருக்கிறதா போன்ற விடயங்களை மருத்துவர் அறிய விரும்புவார். இவை நோய்க்கான காரணத்தைக் கண்டறிய அவருக்கு உதவும். பொதுவாக நோயைக் கண்டறிவதற்கு ஆய்வுகூடப் பரிசோதனைகள் எதுவும் தேவைப்படாது.

இருந்தபோதும் உங்களது காது கேட்கும் திறனை மதிப்பீடு செய்வதற்காக சிலவேளை audiogram செய்ய நேரிடலாம். CT Scan, MRI போன்ற பரிசோதனைகளும் அரிதாகத் தேவைப்படலாம்.

அடிக்கடி கோப்பி குடிப்பவராயின் அதைக் குறையுங்கள். கொக்கோகோலா போன்ற பானங்களும் கூடாது. புகைத்தலை நிறுத்துவது நிறைய உதவும். உணவில் உப்பைக் குறைப்பதும் உதவலாம். சிலரது குருதியில் Zinc இன் அளவு குறைவாக இருப்பதுண்டு. அத்தகையவர்களுக்கு Zinc மாத்திரைகள் உதவலாம். காது குடைவது கூடாது. துணி, இயர் பட்ஸ் போட்டு சுத்தம் செய்ய முனையும்போது காதுக் குடுமி மேலும் உட்சென்று செவிப்பறையுடன் அழுத்துப்படும். இதனால் இரைச்சல் ஏற்படும்.

உங்கள் வேலைத்தளம் அதீத இரைச்சல் உடையதாயின் அச் சத்தங்கள் உங்கள் காதுகளைப் பாதிக்காது பாதுகாக்க வேண்டும். அத்தருணங்களில் அதைக் குறைப்பதற்கான இயர் பிளக் உபயோகிப்பது நல்லது. இசை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், வணக்க தலங்களும் அதீத ஓசைகளால் சூழலை மாசுபடுத்துகின்றன. இவை உங்கள் காதுகளையும் பாதிக்கும். அரசாங்கங்களும் பொலிசும் அவற்றைக் கண்டு கொள்வதில்லை என்பதால் எமது காதுகளை நாங்கள்தான் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் வீட்டிலும் உங்களுக்கு எதிரிகள் இருக்கலாம். ஹெயர் ட்றையர், நீரியக்கும் இயந்திரம், மிக்ஸிகள் போன்ற உபகரணங்களுடன், உங்கள் ரேடியோ, தொலைக்காட்சி, மொபைல் போன்றவையும் அதீத அதிர்வுகளை ஏற்படுத்திக் காதுகளைப் பாதித்து இரைச்சலை ஏற்படுத்தலாம்.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585





